85917

D-12MDS

85917

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பழனியாண்டவர் திருவிளையாடலாகிய

# மாங்கனி சரித்திர நாடகம்.

இஃது

சங்கரையர் மாணாக்கரிலொருவராகிய
கூடலூர்தாலூகா பண்ணுருட்டிக்கடுத்த காடாம்புலியூர்
மதுரா கொஞ்சிகுப்பம்

வன்னியகுல துரைசாமி சமஷ்டியார்

இயற்றியதை

கை. சு. துரைசாமிமுதலியாரிடம்
ரிஜிஸ்டர் பாத்தியதைப்பெற்று

அமரம்பேடு
முத்துவடிவேல் முதலியார் அவர்களால்

சென்னை:
பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1927.

ரிஜிஸ்டர் காபிரைட்.

24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

0-,2MD56,P
N27
85917

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பழனியாண்டவர் திருவிளையாடலாகிய

# மாங்கனி சரித்திர நாடகம்.

இஃது

சங்கரையர் மாணாக்கரிலொருவராகிய

கூடலூர்தாலுகா பண்ணுருட்டிக்கடுத்த காடாம்புலியூர்

மதுரா கொஞ்சிகுப்பம்

**வன்னியகுல துரைசாமி சமஷ்டியார்**

இயற்றியந்த,

**கை. சு. துரைசாமிமுதலியாரிடம்**

ரிஜிஸ்டர் பாத்தியதைப்பெற்று

அம்மாம்பேடு

**முத்துவடிவேல் முதலியார் அவர்களால்**

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

ரிஜிஸ்டர் காபிரைட்.

நெ-24. தாண்டவராயப்பிள்ளைவீதி.

௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அஷ்டாஷ்ட மூர்த்தங்களாகிய

# சிவபராக்கிரமம்.

ஒப்பு ஒதி முதலீறில்லாத சிவபெருமான் தம்மடியார்க்கு அநுக்கிரகஞ் செய்யும்வண்ணஞ் சகளீகத்த அறுபத்து நான்கு மூர்த்தங்களை சிவபராக்கிரமம் எனப்படும். இவ்வரிய நூலைச் சிறந்த செந்தமிழ்நடையில் செவ்வனே பயின்று பன்னூல்கள் உரையெழுதியும், சில நூல்கள் மொழிபெயர்த்தும், விளங்கும் சென்னை கிறிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும் சைவப்பிரசாரணருமாகிய ஈக்காடு. இரத்தினவேலுமுதலியார் அவர்களால் தமிழ் வசனநடையிலியற்றி அவ்வவ்வற்புதங்களை நேரிற்கண்டனபோல விளக்கத்தக்க 64-திவ்ய திருவுருப்படங்கள் சிற்பநூல் விதிவழுவாது எழுதியமைத்து முக்கியமான யிடங்களில் வேதம், உபநிஷதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய பல வடநூல் மேற்கோள்களும், தமிழ்நூல் மேற்கோள்களுங் காட்டி அச்சிட்டு அழகாகப் பயிண்டுசெய்துள்ள இந்நூல் இன்றியமையாதது. இதிலுள்ள திருவுருவங்கள் பூசிக்கத்தக்கன.

புத்தகத்தின் விலை ரூபா-2.

அ. முத்துவடிவேல்முதலியார்,
நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி,
சென்னை.

65917

17 MAY 1928
MADRAS

## சாற்றுகவிகள்.

சென்னப்பன் நாயகன் பாளையத்திற்கடுத்த நடியவீரப்பட்டு

அருணாசல முதலியாரால் இயற்றிய

விருத்தம்.

சீரோங்குங் கொஞ்சிநகர் துரைசாமி சமுத்தியாரென்
சிரப்புற்றோங்கும்
பேரோங்குஞ் சிலகவிதை பாடியதில் சிரப்புபெருஞ்
செல்வரானோர்
தேரோங்கு குபேரன்முதல் சொல்லுதற்கு அரிதான
செங்கனிதன்பொன்
ஞரோங்கும் நடுவைநகர் அருணகிரி முதலியதை
வாழ்த்தினரே.

# விளம்பரம்.

இந்நாடகமாவது சிரப்புப் பொருந்திய நல்லாத்தூரில் சிவத்தோடு கலந்த சிவப்பிரகாச சுவாமிகளுடைய ஆதாரத்தாலும் பழனி தல புராண ஆதாரத்தாலும் செய்யப்பட்டது.

சந்தேகமானவர்கள்.

ஐயநின் சென்னிமிசை யென்றசெய்யுள்களையும்,
அரனவ னிடத்திலே யென்றசெய்யுள்களையும்,
அம்பிகையரந் தனைநோக்கி யென்றசெய்யுள்களையும்,
பார்க்கும்படியாக வேண்டிக்கொண்டனன்.



மாதுசரஸ்வதிக்கு காதலுடையநாதன்
மேதினியைபடைக்குஞ் சாதகமானவேதன்
மெல்லியசொல்லுடை வல்லவனென்ன
தொல்லுலகெல்லவர் நல்லவனென்ன (சத்திய)

விருத்தம்.

குறைவில்லாவுலகில்சீவ கோடிகளனைத்துமாதி
மறைவழிதன்னைக்கொண்டு மாளாதசிருஷ்டியோங்க
பிறையணிசடையோன்பாம்பில் பிரியமாநடனஞ்செய்தோன்
இருவர்கள்பாதந்தன்னை யிருதயந்தன்னில்வைத்தேன்.

வசனம்.

ஆனால் கேளுங்கள் மறையோர்களே இந்த கிரைவான பிரபஞ்சங்களிலுள்ள சீவகோடிகள் அனைத்தையும் சுருதியைக்கொண்டு நீங்காத சிருஷ்டி யோங்கும்படிக்கு இளமையாகிய மூன்றாம்பிறை சந்திரனை சடையில் தரித்தருளிய பரமசிவத்திற்கும் அந்தன்மேற் பள்ளிகொண்டருளிய ஸ்ரீமந்நாராயணமூர்த்திக்கும் நான் வந்தனம் செய்தேன் என்பதாம்.

பொது வசனம்.

இப்படியாக பிரம்மா கொலுவீற்றிருக்கிறபோது திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் வருவது.



விருத்தம்.

பாரதிபாகம்வாழும் பங்கயந்தானளித்த
நாரதமுனிவர்தானு நலமானதிரேகந்தன்னில்

நீரதுநிறையபூசி நெடியகைவீணையேந்தி
சாரதுபெருகும்பிரமன் சபைக்கிதோவருகின்றாரே.

தரு.

நாரதமுனிவர்யிவரே நத்தியதவமது பத்தியசெய்திட
வேருகிடையாதிவரே
மேரதுதனக்குமணம் விள்ளபோகுமோ
சாரதாபீடமோதனம் சாற்றிபோற்றுவார்தினம்

சுருள். சத்தியஞத்திக்கு நித்தியமென்றிடும்
இத்தரைமத்த நனத்தியமென்றிடும் (நாரத)

வீணைகியானமாபாடுவார்
மேனகையூர்வசி யானதிலோர்த்தமை
நாணரம்பையும் பாடுவார்
பாணிதமுங்கண்டு பணிவார்யிவர்க்குதொண்டு
வேணதுலகமுண்டு வெள்ளைமனமேகொண்டு

சுருள். விண்டிடகண்டனர்
தண்டிடாமெய்யர்
சண்டனுமண்டிடா
பண்டுள்ளதுய்யர் (நாரத)

சண்டமாருதிசாடவே
சர்ப்பமுமேருவை
தப்பாமல்மூடிட
குண்டலதேவருவாடவே
கண்டுகடியசென்று காற்றுவிசையாநின்று
உண்டுகியானமுநன்று உரகன்செவியில்விண்டு

சுருள். உம்பர்கள்துன்பத்தை
சம்பிரமாநீக்கினன்
அம்பரயிம்பரம்
நம்பல்களக்கினர் (நாரத)

திரிமண்டலமுங்கடந்து
சகத்தினில்மாயயை
அகத்தினில்கொள்ளாத

உ

சிவமயம்.

பழனியாண்டவர்

# திருவிளையாடலாகிய

# மாங்கனிசரித்திர நாடகம்

விநாயகர் துணை.

விருத்தம்.

சீர்புனலணியுநாதன் செங்கரகனிதனக்கா
கார்புனல்வுலகமொற்ற கணத்துளவலமாவந்து
ஆர்புனந்தன்னில்சேர்ந்த அறுமுகன்கதையைபாட
தார்புனல்கவிழ்த்தயானை தாளிணைசிரன்மேல்கொண்டேன்.

சண்முகன் துணை.

விருத்தம்.

நஞ்சுண்டபரமருக்கு நற்சுதனுகதோன்றி
கஞ்சனைசிறையிலிட்ட கந்தனேநின்தாள்போற்றி
பஞ்சையான்சொல்லிலொன்றும் பழுதுகள்வந்திடாமல்
நெஞ்சினில்நின்றுகாப்பாய் நின்மலாபோற்றிபோற்றி.

ஸ்ரீ கண்ணபிரான் துணை.


விருத்தம்.

மூலமென்றழைத்தயானை முக்கியமுதலைக்காக
காலன்போலவந்த கண்ணனேகழல்பணிந்தேன்
பாலனிக்கதையைப்பாட பரந்தாமாகருணைகூர்ந்து
தாலத்திலிருந்துகாப்பாய் தயாபராபோற்றிபோற்றி.

சரஸ்வதி துணை.

விருத்தம்.

மலைமகள்மைந்தர்வேலர் மாங்கனியதனைவேண்டி
அலையெறிவுலகஞ்சுற்றி அவசரமாகவந்து
தலையுள்ளபழனிசென்ற சண்முகர்கதையைப்பாட
கலைமகள்நின்றன்றாளை கடையவன்பணிந்திட்டேனே.



## பிரம்மா சபைக்கு வருவது.

விருத்தம்.

குறைகடலுலகமெல்லாங் குணமுடனளிக்கவல்ல
மறையதுகரத்திலேந்தி மாமுடிவதனந்துன்ன
புறைமனதில்லாவேத புனிதர்கள் அரிகில்சூழ
பிறையணிந்தோனேபோற்றி பிரம்மரும்வருகின்றாரே.

தரு.

சத்தியலோகவாசன் யெத்திசைபுகழ்நேசன்
சதுர்முகதேவர்வந்தார் வேடிக்கையாக (சதுர்)

சித்தத்தில்சிவன்பாதன் பத்திமரவானுதன்
வித்தர்முனிவர்க்கெல்லாம் மித்துருவானதேவன் (சுருள்)

மேவரும்யாவரும் ஆவலாய்சூழ
தேவரும்யாவரும் காவலர்தாழ (சத்திய)

ஒப்புவமையில்லாத முப்புரிமார்பிலாட
தப்புதலொன்றுமில்லா செப்புமறையோர்பாட
சங்கிதமங்களம் யெங்குமொலித்திட
பங்கயனிங்கிதம் பொங்கிசொலித்திட (சத்திய)

அஞ்சலஞ்சலாகவே வஞ்சியர்கவரிவீச
விஞ்சயரியக்கர்கள் தஞ்சமென்றுமேபேச
வெத்திகள்பெத்திடும் சத்தியர்கூட
முத்திலுங்கற்றவர் பத்தியநாட



சுரியவனெருங்காதிடைந்து
தூரியபடியறிந்து சுத்தஞானந்தெரிந்து
பிரியமனங்கரைந்து பெருமானருள்சுரந்து சுருள்

யெண்ணின்பம்மண்ணின்பம்
யெண்ணின்பமெல்லாம்
விண்ணின்பமுண்ணின்பங்
கண்ணின்பவல்லான் நாரத

நாரதர் விருத்தம்.

முந்துமாமறையைக்கொண்டு மூதுலகளிக்கவல்ல
தந்தையேவுந்தன்பாதந் தனையனும்போற்றிஐயா.

பிரம்மா விருத்தம்.

வந்தென்னடிபணிந்து மைந்தனேவாழிவாழி
இந்தநல்லாசனத்தில் இன்பமாயிருந்திடாயே

நாரதர் வசனம்.

ஆதியாகிய மறையைகொண்டு விரிவாகிய உலகத்தை படைக்க வல்லவராகிய யென்தந்தையே உமது பாதகமலங்களுக்கு அடியேன் வந்தனம் தந்தையே.

பிரம்மா வசனம்.

மகா அன்போடுகூடிய மனதுடனே யென்னடிபணிந்த யென் மைந்தனுகிய நாரதமுனியே நீடூழியாக வாழ்கக்கடவது இந்த ஆசனத்திலிருமப்பா மைந்தனே.

தரு-பிரம்மா சொல்லல்.

மும்மலமகற்றிடும் நின்மலமானமைந்தா நீறும்நன்றுநீறும்
செம்மலர்கரத்தோனே நம்மிடம்வந்தசேதி தாரும்விடைதாரும்

நாரதர்.

சேதிகளொன்றுமில்லை சாதுமனதுடனே கேளும்நன்றுகேளும்
மேதினியெல்லாஞ்சுற்றி வேதியாயிவிடம்வந்தேன் ஆளுமெனையாளு

பிரம்மா.

வந்ததினுலெந்தன்சிந்தையில் சந்தோஷமானேன் கொள்ளுமுறுதிகொள்ளு
அந்தந்ததேசந்தன்னில் யெந்தஅதிசயங்கண்டா விள்ளும்சொல்லிவிள்ளும்

நாரதர்.

வள்ளுவேனுலகத்தில் உள்ளதொழில்ஒன்றுங் காணேன்ஒன்றும்காணேன்
தெள்ளுமறையுணர்ந்த வள்ளலேபொய்களொன்றும் பூணேன்என்றும்பூணே.

பிரம்மா விருத்தம்.

பொய்பதைகடிந்துதள்ளி பூரணமதையுணர்ந்த
மெய்யுள்ளமனத்தின்மைந்தா மிகவும்சந்தோஷமானேன்
பையருமயங்கிநின்ற பண்ணதையின்றுகேழ்க்க
ஐயனேயாசையானேன் யாழ்மீட்டிபாடுவாயே.

வசனம்.

பொய்யென்றதில்லாத மெய்விளங்கிய யெனதுமைந்தனே ஆதியில் சண்டமாருதிக்கும் ஆதிசேஷனுக்கும் எற்பட்ட யுத்தத்தில் ஆதிசேஷன் மயங்கும்படியாக பாடிபாட்டை இன்றைக்கி கேழ்க்கும்படிக்கி அவாவுடையவனுக இருக்கிறேன் நீ உன்னுடைய வீணையைமீட்டி பாடுமப்பா நாரதமுனியே.

நாரதர் விருத்தம்.

யென்னையாள்தந்தையாரே யென்பாட்டுக்கின்பங்கொண்டு
சொன்னதுசந்தோஷமாச்சு சொற்படியாழைமீட்டி
பன்னகமணிந்தயீசன் பாதத்தைமனதில்கொண்டு
நன்னகியானமாக நான்பாடதுடங்கினேனே.

வசனம்.

ஆனுல் கேளும் யெனது தந்தையரே யென்னுடைய பாட்டுக் காசைபட்டு தேவரீர்கேட்டது யெனக்கு சந்தோஷமாகிவிட்டது அப்படி வொன்னுடைய வார்த்தைப்பிரகாரமே யாழைமீட்டி பாட துடங்கினேள் தந்தையே.

தரு.

நித்தியவஸ்துவை நத்திடுங்கனமே
முத்தியளித்திடும் சத்தியமனமே—நித்தி

சித்தமும்சிதரிட பந்தியபண்ணி
குத்தமுங்கருதிட. வித்தென்றுயெண்ணி—நித்தி

இந்தநிலையதை சொந்தம்பாராட்டி
பந்தத்திலழுந்தாதே அந்தம்விருட்டி—நித்தி



நன்மலமனதை மும்மலம்தேத்தி
துன்மலமாகாதே செம்மல்போற்றி—நித்தி

பற்பலபொருளை பகையதுபண்ணி
சொற்பதங்கடந்த சுடரதையெண்ணி—நித்தி

அலையாமனதை அமர்த்தியநினறு
துலையாபதத்தை தொழுதுமேகண்டு—நித்தி

மூன்றையுங்கடந்த முதுமறைமுடிவில்
ஊன்றியபாதத்தை ஊன்றியபடிவில்—நித்தி

பிரமா சொல் விருத்தம்.

தாதவிழ்கொன்றைசூடுஞ் சங்கரந்தன்னைபோற்றி
பேதமில்லாமல்பாடும் பிரியமாநின்பாட்டைகேட்டு
மாதவமைந்தாவுனக்கு மாங்கனியொன்றுதந்தேன்
சாதகமாகபெற்று சம்மதம்போலேசெய்வாய்.

வசனம்.

மடல் விரியப்பட்ட கொன்றை தும்பை மலரைச் சடையில் சூடும் பரமசிவத்தை மனதில் நினைந்து குற்றமில்லாமல் பாடும் நின் பாட்டைகேட்டு உனக்கு நல்லமதுரமாகிய மாங்கனியொன்று தந்தேன் அதை பெற்றுக்கொண்டு உன் சம்மதம்போலே நடத்துமப்பா மகனே.

நாரதர் சொல் விருந்தம்.

நந்தநல்கனியைவாங்கி தந்தையேமனமகிழ்ந்தேன்
இந்ததோர்கனியைபோலே யெங்குமேகண்டதில்லை
சிந்தெழுமதியசூடுஞ் சிவனுக்குஅளிக்கவேணும்
அந்தமாகைலைக்கேக அன்புடன்விடைகொடாயே.

வசனம்.

கேளுந்தந்தையே நீதந்த மாங்கனியை நான் பெற்றுக்கொண்டேன் இந்த மாங்கனியைப்போல் எங்குங்கண்டதில்லை ஆகையால் இக்கனியை பரமசிவத்திற்கு அளிக்கவேணும் கைலைக்கிபோக உத்திரவு கொடுத்தந்தையே.

பிரமா வசனம்.


அப்படியே போய்வாருமையா மகனே.

## பொது வசனம்.

நாரதமுனிவர் கைலைநாடி வருகிறபோது பரமசிவம் கொலுவாக வருகிற விதங்காண்க.

### பரமசிவம் வருவது விருத்தம்.

பஞ்சமுகமது துலங்க சடையில்கங்கை
 பாதிமதியுடனே பக்ஷமாக
மஞ்சனையாள்பார்வதியே வாமபாகம்
 வைத்துபரனத்தயுந்தான் வளர்க்குமீசன்
தஞ்சமென அடிகளிரு புரமுஞ்சூழ
 தாளநிரபூதிமெய்யில் ருத்திராக்ஷம்பூண்டு
கஞ்சமலர்க்கண்ணனுமே பிரமந்தேதி
 காணுதத்திருப்பாத துலங்கதாமுர்.



### தரு.

சங்கரதேவரும் வந்தனர் கைலைவாழும் (சங்க)
சங்கரதேவரும்வந்தார் பொங்கரவமீதிலாட
கங்குலகன்னுவோடுந் திங்கட்சடையிலாட (சங்க)
எங்குங்கனிந்துயாரிக்கவல்லசத்தி
 வாமத்தில்நின்று



யிணையடிகாட்டிய யேத்துவாளன்பர்க்குமுத்தி
 சிரசின்மீது
தங்கியகங்கையை பகிரதன்பண்ணினன்பத்தி
 அதனால் முத்தி
சகரரடைந்த சாத்துமேவேதமுனத்தி
 இப்படிவல்ல
நங்கையிருவரை அங்கத்தில்கொண்ட
 பொங்கமாநால்வருக்கு கங்கைகள்விண்ட (சங்க)

வானவரஞ்சித ஆலமுங்கண்டத்தில்துன்ன
 மெய்யினில்பூதி
வரைந்தருத்திராக்ஷ மணியதுமின்ன
 செங்கரந்தன்னில்
மானுமழுவுமே சூலகபாலம்பன்ன
 என்றும்பிரியா
மானவர்மோளவர் தாமறையாகமுஞ்சொன்ன
 வழியில்நின்று
பவமதுநீங்கவே சிவசிவாவென்றிட
 அவையெல்லாம்வாங்கிய தவமதுவிண்டிட (சங்க)

நந்தியுமத்தளங் கொட்டிடுந்தொனியதுயெட்ட
 ஆகாயமட்டும்
நாரதர்வீணைகள் மீட்டிடுகியானமுமுட்ட
 பரமானந்தம்
சிந்தையில்கொண்டுமே சித்தர்முனிவர்கள்கிட்ட
 அருகில்நின்று
திசைமுகனனுவெனும் பிசகிடாதாளமுந்தட்ட
 கூத்துகளாடி
காளியசெயித்த தாளதுதுன்ன
 நாளுமேசிவனை யாளவேசொன்ன (சங்க)

### விருத்தம்.

உலகுயிரனத்துமோங்க உள்ளத்தில்கருணைகூர்ந்து
இலசியகைலைதன்னி லின்பஆசனத்தெழுந்து
விலகில்லாநோக்கத்தோடு விமலநான்யிருக்கும்போது
பலகலைபுகழுநந்தி பலருமேயருகிருப்பீர்.

பொது வசனம்.

இப்படியாக பரமசிவங் கொலுவாக வீற்றிருக்கும்போது அவரைக் காணும்படிக்கி பார்வதி வருவது.



சீச பத்தியம்.

தஞ்சமென்றவர்க்கெல்லாந் தன்னருளளித்துமே
சங்கரர்பதங்காண கினவுகொண்டு
பஞ்சின்மெல்லடியொத்த பார்வதியாளுமே
பக்ஷமாயெழுந்து நற்பணிகள்பூண்டு
நஞ்சமலர்முகத்தினில் மஞ்சளுங்குங்குமம்
கரியவிழி அஞ்சன திலகமிட்டு
மஞ்சளைதபளைத்திட்ட கூந்தலும்வகுத்துமே
வாசமதுமிக வீசுமலர்கள்சூடி.

முடுக்கு.

அஞ்சலாசத்திகளிரிகில்கூட அருவையர்கள்சாமரையமர்ந்துசாட
வஞ்சகத்தோர்மனதுரையாவள்ளல்தேட வல்லிஎனும்பார்வதிவருகின்றாளே.

தரு.

பாதிமதிதானணிந்த பரமன்தனக்குபகாரி
ஆதியுமைபார்வதியும் அன்புடன்வாறாள்



உலகந்தனிலுறையும் உயிர்கள்யெல்லாந்தழைய
இலகுங்கருணைவைத்த ஈஸ்வரிவாறாள்
கோதில்லாதவமியற்றி குற்றமில்லாசிவனார்மெய்யில்
பாதியிடபாகம்பெற்ற பார்வதிவாறாள்
நஞ்சதனைநெஞ்சணிந்த நாயகனடியேபோற்றி
அஞ்சனமேனியிலங்க அம்மனும்வாறாள்
வேலவர்தனக்குமாதா வினைகளெல்லாம்போக்குந்தாயார்
ஞாலமுண்டோந்தங்கையான நங்கையும்வாறாள்
விண்ணவர்க்குங்கண்ணவற்கும் வேண்டுந்துரைசாமியற்கும்
புண்ணியலோகமளிக்கும் பொற்கொடிவாறாள்.

பார்வதி விருத்தம்.

தாதியேசொல்லக்கேளும் தண்வலர்கைலைவாழும்
ஆதியாயீசந்தன்னை அன்புடன்பணிந்துபோற்றி
ஓதியின்பொருளையெல்லாம் உத்தமிபரமனாலே
சேதியுந்தெரிந்துநாமும் சீருடன்வருகுவோமே

வசனம்.

ஆனல் வாருங்கடியம்மா தாதிமார்களே யெனது பிராண பத்தாவாகிய கைலைநாயகரைக்கண்டு ஞானத்திற்கு பொருள் அறிந்து வருவோம் வாருமம்மா சகியே.

தரு.

சரணமுந்தன் திருவடிக்கி சரணங்கோடி சரணம்
கருணைவளர்பாதந்தன்னில் கன்னியாளும்சரணம்
உலகமுய்யும்பாதந்தன்னில் உண்மையுடன்யாம்பணிந்தால்
விலகொன்றில்லாபதங்கிடைக்கும் மெல்லடிக்கியான்சரணம்
நல்லமலர்வில்லம்கொண்டு நாதந்திருவடிபூசிக்க
எல்லையில்லாவீடளிக்கும் இதுதருணம்யான்சரணம்
மணவாளனார்மலர்பதத்தை மாதர்களுந்தினம்பூசித்தால்
துணையாகுமேகடைவழிக்கி தோகையாளும்யான்சரணம்.

பார்வதி விருத்தம்.

அகிலவுயிருக்குயிராயமர்ந்தநாதா
அம்புலியுங்கொன்றைதும்மையணிந்தநாதா

புகலரியமறைவழியைநால்வருக்கு
போதித்தகுருவருளைகாட்டும்நாதா
நூசனுடையோர்மனத்தடையாபிராணநாதா
தோகையெனக்கென்றுநம்பிரியசாதா
சகலருக்குமுத்தியெந்தபடிகிடைக்கும்
தையலருக்கின்பமுடனுரைசெய்வாயே.

வசனம்.

சர்வலோகவுயிருக்கும் வுயிராவிளங்கியிராநின்ற எனது பிராண நாயகா இவ்வுலகத்திலுள்ள நமது அடியார்களுக்கு மேலாம்பதவியாகிய முத்தி யெந்தபடிகிடைக்கும் அதை அடியாளுக்கு உரை செய்யவேணுமையா சுவாமி.

பரமசிவம் விருத்தம்.

தாரணிகுழலாளான தையல்பார்வதியேகேளும்
பாரினில்மாந்தர்க்கெல்லாம் பதம்பெறவழியுரைப்பேன்
கோரியாசிர்மநாளில் கூடுமேமுத்திதானும்
தேரியுமதிலேயொன்றில் சீக்கிரமாகுந்தானே.

வசனம்.

கேளும் பெண்ணே பார்வதி நமது அடியாருக்கு முத்திகிடைக்கும்வழி யெப்படியென்று கேட்டால் ஆசிர்மம் நாலிருக்கின்றது அந்த நாலிலுமுத்திகிடைக்கும் அதிலும் ஒன்றில் சீக்கிரமாக கிடைக்கும் பெண்ணே பார்வதி.

தரு-பார்வதி சொல்லல்.

தேவாவந்தனந்தந்தனே
திருவடிதன்னிலே அருவையாள்அன்புடன்
காவாவந்தனந்தனே
தேவாஆசிர்மந்தன்னை நாவாலின்பமாகவே
நீவாவுரைத்துநன்று சாவாபதந்தருவா
நித்தா-களங்கமில்லா சுத்தா-எல்லாவுயிருக்கும்
சத்தா-நிறைந்தருளும் வித்தா-யிதுதருணம் (தேவா)

பரமசிவம்.

பெண்ணேயின்பமதாகவே
பெருமையுடனுரைப்பன் அருமையாகேழ்ப்பதை



கண்ணேயின்பமதாகவே
பெண்ணே ஆசிர்மந்தன்னை யெண்ணுநடத்திவா
திண்ணமுரைப்பன்யானும் வண்ணமயிலேகேளும்
தேவி-யெனதுபிராண ஆஆ-கருணைபொழி
வாவி-அருகமைத்து மேவி-யிதுதருணம் (பெண்)

பார்வதி.

நாதாநடனபாதனே
நாலையும்தனித்தனி மேலுமேயுரைசெய்வீர்
நாதாநடனபாதனே
நாதாவிபரமாக பேதாள்யெந்தனையேயும்
தோதாஅருகமைத்து வேதாதுருவுடையா
சொல்லும்-யென்றுங்கலியை வெல்லும்-மரவேந்தானே
அல்லும்-பகலுமாக நில்லும்-அடியாளுடன் (நாதா)

பரமசிவன்.

மானேமகிழ்ந்துகேளுமே
ஆசிரமந்தனித்தனி பேசியவுரைப்பனுன்
மானேமகிழ்ந்துகேளுமே
மானேபிரம்சாரி பின்தானேகிரஸ்தனும்
வானபிரபிசித்தனுல் மோனசன்னுசியாகும்
மாது-இதிலேயொன்றுங் கோது-யில்லையேசொன்னேன்
சாது-சந்தேகமானுல் ஓது-தடையில்லாமல் (மானே)

பார்வதி விருத்தம்.

பண்ணவர்முனிவரென்று பண்புடன்பாடிபோற்றும்
அண்ணலேஉந்தன்வார்த்தை அடியாள்கேட்டமகிழ்ந்தேன்
திண்ணம்ஆசிர்மநாலை செய்வதுயின்னதென்று
பெண்ணவள்யெனக்குநன்று பேசுவீரரியத்தானே.

வசனம்.

கேளும் பிராணநாயகா தேவரீர் வார்த்தையைகேட்டு அடியாள் மகிழ்வடைந்தேன் ஆசிர்மவழி நாலையுந் தனித்தனியாக நடத்துமுறையைச் சொல்லும் கர்த்தனே.

### பரமசிவன் விருத்தம்.

தனித்தனிபிரித்துகேட்ட தையலேகேளுஞ்சொல்வேன்
செனித்தவர்.. ரணமட்டுந் தெரிவையேமரக்கும்பிரம்மம்
இனித்தனன்மொழியாளோடு யிருப்பதுகிரகமாகும்
பனித்தடங்கானம்புக்கி பதம்பெரும்யிரண்டுந்தானே.

### பார்வதி-தரு.

நாதாஆசிர்மநாலைநீதமுடனே கேட்டேன்மாது சுவாமிமாது
தோதாகநாலிலொன்றை வேதாநீயேலாசொன்னாயேதுநன்றுயோது

### பரமசிவம்.

ஓதுவேன்கிரகஸ்தன் கோதில்லாகுணத்தாளேகேளும் நன்றுகேளும்
காதலுடனடத்த வோதிவழிகிடைக்கும்நாளும் யெந்தநாளும்

### பார்வதி.

நாளாதுதிப்பவர்க்கு மாளாபதமளிக்குநாதா பிராணநாதா
கேளாகிரகஸ்தபடி ஆளாயெனக்குறையும்வேதா சர்வேதா

### பரமசிவம்.

வேதவிதிப்படிக்கு மாதேமணம்புணரவேணும் நன்றுவேணும்[ணும்
பேதமில்லாமல்யென்றும்ஒதுவேன்ஒத்திருக்கவேணும்யெல்லாந்தோ

### பார்வதி.

தோணுமுலகந்தன்னில் வேணவிதசாதிபெண்களுண்டு மிகவுண்டு
ஆணும்பெண்ணுமதாக பூணுமுறைகள்சொல்லுங்கண்டு நீருங்கண்டு

### பரமசிவம்.

கண்டுவுரைப்பெனவருக்குண்டானசாதி வழிபார்த்து தேடிபார்த்து
நன்றுகுணமுடையபெண்டையேகொள்ளவேணும்யோர்த்து சிதம்யோர்த்து

### பார்வதி.

எத்தபெண்களைகொண்டுபோர்த்துநடத்தபன்னிவெல்லும்கலிவெல்லும்
கூத்துஉதைத்ததாளாகாத்துஅடியாளுக்குசொல்லும்நன்றுசொல்லும்

### பரமசிவம்

சொல்லுவேனுடவ்ருமெல்லியருமனமொத்துகொண்டுஒத்துகொண்டு
தொல்லைநூல்மறைப்படிஅல்லலில்லாதானடத்தவுண்டுவழிவுண்டு



### பார்வதி கொச்சகம்.

பங்கயன்சிரத்திலொன்றை பரித்தரிந்தகையாவுந்தன்
செங்கமலபதந்தனிலே தெரிவையாளும்யான்பணிந்தேன்
மங்கயருமாடவரு மகிழ்ந்துயில்லரநடத்த
தங்கும்பதமின்னதென்று சாத்தியருள்தான்புரிவீர்.

### தரு-பரமசிவன் சொல்லல்.

சாத்தியருள்தான்புரிவேன்தையலேநீகேளும்
சத்தியமுறைப்படியேதாமிருவர்நாளும்
போற்றியில்லரநடத்தபுண்ணியம்வந்தாளும்
பொற்கொடியேபூர்வவினை தானகன்றுமீளும்.

### பார்வதி.

பூமியுண்டமாலயனும் போற்றும்பிராணநாதா
புகலிருவர்மனம்வேறானால் புண்ணியங்கைகூடாதா
வாமிதனக்கின்பமாக வகுத்துரைப்பாய்வேதா
வளரும்விதியினிவே றுண்டோவள்ளலெனும்வேதா.

### பரமசிவன்.

பெண்ணுமாணுமனம்வேறானால் பிரியும்வாழ்வுபாரும்
பேதையரேயின்னங்கெட்டு பின்னுமனந்தேரும்
திண்ணமிவர்மனங்களொத்து செய்தாகருமநேரும்
தேவிபுருஷார்த்தநான்குஞ் சீக்கிரம்வந்துசேரும்.

### பார்வதி.

இல்லரத்திலரம்பொருளும் யின்பம்வீடுமையா
யிஷ்டம்போலேகூடுமென்று யெடுத்துரைத்தீர்மெய்யா
சொல்லரமேநாலில்மூவர் தோன்றலாச்சுதுய்யா
சுத்தமுள்ளோரவருக்குவீடு சொந்தமெய்யாபொய்யா.

### பரமசிவன்.

வீடுசொந்தமில்லையென்று விளவிடேன்யான்மானே
வித்தகியேயின்னங்கேளும் வேணதுயென்னானே
காடுவீடுநாடுமைவோர் காணுமூவர்தானே
கஷ்டமதில்வேணதுண்டு கண்மணிசெந்தேனே.

பார்வதி.

ஆசையற்றமூவருக்கு மதிலேகஷ்டம்யேது
அண்ணலனின்பதம்பணிந்தன் அன்புடனேமாது
பாசமுள்ளயிருவருக்கும் பகரரியசாது
பத்தும்வீடுசித்திப்பது பண்புடனேவோது

பரமசிவன் கந்தார்த்தம்.

ஓதுவேனுன்பெண்ணேகேள் மூவர்களும்ஒவ்வொருவ
ருருதியுட னிலைகெடாத
வேதமுறைவழிப்படியேத் தனித்தனியா
வேண்டும்விதிதனைநடத்த வீடதாகும்
பேதமனதுடன்கொஞ்சந் தவறுமானல்
பெருநரககுழியதுவே பாடதாகும்
தோதுடனேயில்லரத்தின் புருஷன்பெண்டீர்

தரு.

சுத்தமதாககூடியே யிருவர்மனம்வொத்து மிகவேதேடியே
பத்தும்வினையொழித்து பாரிலரம்பொருளை
சித்தமுடனடத்த சேரின்பவீடுமாகும் சுருள்
தெரிந்துநீகொள்ளும் அருந்தவமானே
திருந்திடசொன்னேன் பொருந்தியேயானே சுத்த

பார்வதி கந்தார்த்தம்.

குன்றெடுத்துகுடைபிடித்த மால்தனக்கு
குத்தமிலாசக்கரகதை தந்தநாதா
பன்றுதனிலத்தர்சித்தர் தேவர்போத்த
மாருததிருநடனம் புரியுநாதா
கன்றுடனேகரவையது கானேசென்று
கனிவுடனேபாலளித்த விதமாநீரும்
என்றுமன்பருக்கருள்சுரந்து கருணைதந்த

தரு.

சசாசந்தோஷமாகினேன் கைலைநகர்வாசா ஏந்
நேசாஆசிர்மனாலே தெரிவையாள்மிகக்கேட்டு
ஆசாபாசமுடனே அன்புகனிந்துவுந்தன் சுருள்



அடியிணைபணிந்தேன் முடிவில்லாபரனே
படியதைகாக்கும் வடிவுலகரனே சசாச

பொது வசனம்.

இப்படியாக பார்வதியும் பரமசிவமும் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது அந்தசமயத்தில் நாரதமுனிவர் வருவது.

தரு.

வேதன்சபையைகடந்துமே வேண்டுங்கைலைதுடர்ந்துமே
நாதனருளடர்ந்துமே நாளும்வாரேனடந்துமே
வெண்ணீர்மெய்யில்பூசியே வீணைகைகள்பூசியே
பண்ணுமறைகள்பேசியே பத்திவாரேகேசியே.

வந்துகைலைநாடினேன் வாணர்பணியைகூடினே
மூந்துவேதம்பாடினேன் முத்திவழியேதேடினேன்.
பரமன்பாதங்கண்டனே பணிந்துஅருளைகொண்டனே
கருமவினைகள்விண்டனே காதலுடனின்றனே.

விருத்தம்.

மூர்த்திகள்தலத்தையெல்லா முறைமுறையாகசுத்தி
எத்தியபாலருக்கா யின்பழுங்கனிக்கெழுந்து
கூத்ததைஉதைத்ததாளா கொடியவெம்பாசம்போக்கி
காத்திடவேணுமையா கழலினைபணிந்திட்டேனே.

வசனம்.

முறைதவராத தவநிர்த்தமாடி பணிந்துவராநின்ற மார்க்கண்டேயருக்காக எமனைஉதைத்தபாதனே உமது திருவடிக்கி அடியேன் வந்தனஞ்செய்தேனையா சுவாமி.

பரமசிவன் விருத்தம்.

முந்துமாமறையுணர்ந்த முனிவர்க்குமுதல்வனாகி
வந்தகண்மணியதான மாதவசொழுந்தேவாழி
அந்தரதேவர்போற்றும் அருமைநாரதரேநீயும்
இந்திடம்வந்தசேதி யியல்பென்னவுரைசெய்வாயே.

தரு-நாரதர் சொல்லல்.

சத்தியலோகஞ்சென்றுயானும் பத்தியுடன்கைலை
வந்தேனுதா கைலைநாதா

பரமசிவம்.

சத்தியலோகம்போனதினால் மெத்தவெகுமதி
யென்னசொல்லு முனியேசொல்லும்

நாரதர்.

மாங்கனிகள்ஒன்றுதந்தார் நான்கனிந்துஉமக்குக்கொண்டு
வந்தேன் கொண்டுவந்தேன்

பரமசிவம்.

பூங்கமலவாசன்மைந்தா தீங்கனியையெந்தனுக்கு
தாரும் இங்கேதாரும்

நாரதர்.

தந்தேன் கனியைவாங்கி யெந்தனைநீகாத்தருளும்
யீசா கைலைவாசா

பரமசிவம்.

எந்தலோகந்தன்னிலுமே யிந்தகனிபோலவே
யில்லை கண்டதில்லை

நாரதர்.

உடல்பொருளாவிமூன்றுந் தடையில்லாதுமக்கீய்ந்து
பணிந்தேன் தந்துபணிந்தேன்

பரமசிவம்.

கடலதுபொங்கிதானே மடைதிறந்தால்போல்கருணை
தந்தேன் கருணை தந்தேன்

நாரதர் விருத்தம்.

நஞ்சணிகண்டாவுந்த னடனதாள்பணிந்துநின்றேன்
வஞ்சியெந்தாளாள்நீயும் வசனித்துயிருந்ததென்ன
அஞ்சுதேயதனைகேழ்க்க அய்யனே தயவுசெய்து
பஞ்சையான்யெனக்குகொஞ்சம் பதந்தனைஉரைசெய்தாயே

வசனம்.

கேளுமையா சுவாமி சர்வஜீவதயாபரா நான் வருகிற சமயமாக யென்தாயாகிய பார்வதியும் தேவரீரும் வார்த்தை யாடிக்கொண்டி



யிருந்தீரே அவ்வார்த்தையென்ன யெனக்கு கொஞ்சந் தயவுசெய்து தெரிவிக்கவேணுமையா சுவாமி.

பரமசிவன் விருத்தம்

மாசில்லாமணியேகேளா மங்கையுநானுமாக
பேசியவசனமப்பா பேருகன்பர்க்காக
ஆசீர்மம்நாலுஞ்சொன்னே னதைவிடவேறொன்றில்லை
தேசிகாதெரிந்துகொள்ளுஞ் செப்பினேனுண்மைதானே.

வசனம்.

கேளுமப்பா நாரதமுனியே நானும் பார்வதியும் பேசிக்கொண்ட வார்த்தையாவது உலகத்தில் அன்பருக்கு முத்தியடையக்கூடிய மார்க்கமாக நான்கு ஆசீர்மஞ்சொன்னேன் அதை தவிர வேறு வார்த்தையில்லை தெரிந்துகொள்ளுமப்பா நாரதமுனியே.

நாரதர் விருத்தம்.

அப்பணிபரனேநித்த னடியிணைதனைப்பணிந்தேன்
மைப்படிகண்ணித்தாயார் மலரடிபோற்றிவாரேன்.

பரமசிவம் விருத்தம்.

செப்பியபடிபோய்வாருஞ் சித்தமுமிககளித்தேன்
தப்பிதஞ்செய்திடாமல் தன்மையாவந்துசேரும்.

நாரதர் விருத்தம்.

இருளடைகானஞ்சென்று யின்பமற்றிருப்போருக்கும்
அருமறைமுனிவோருக்கும் அயன்மாலுந்தனக்குமெட்டா
பெருஞ்சுயஞ்சோதியான பெம்மானுர்வடிவுதன்னில்
உருவாயமர்ந்ததாயே உத்தமிவுந்தாள்போற்றி.

பார்வதி விருத்தம்.

ஆசையுமற்றுகானில் அருந்தவம்புரிவோர்க்கெல்லாம்
ஈசனேபோலமர்ந்த யென்னிருகண்ணேவாழி
வாசவன்லோகம்விட்டு வள்ளல்வாழ்கைலைநாடி
தேசனேவந்தசேதி தெரிவிப்பாயரியத்தானே.

தரு-நாரதர் சொல்லல்.

சேதிகள்ஒன்றுமில்லை தேவர்பணியுந்தாயே
ஆதிகைலைநாடி அன்புடன்வந்தன்சேயே.

பார்வதி.

வந்ததிலெந்தனுக்கு மனதுசந்தோஷமாச்சு
இந்தவிளியீசனாலே யெல்லாநன்மையுமாச்சு

நாரதர்.

ஈசனுநீயுமுந்தி யின்பமாகவேகூடி
பேசியவார்த்தையெனக்கு பிரியமேசொல்லுநாடி

பார்வதி.

சொல்லுவேன் ஆசிரமந்தன்னை சுந்தரர்யெடுத்துரைக்க
மெல்லியாள்யானுங்கேட்டேன் மிகவுமனம்பெருக்க

நாரதர்.

பெருக்கஆசிரமந்தன்னில் பிரியமாயெதைசொன்னார்
உருக்கமாயானுங்கேழ்க்க உரைப்பாயெனக்குநன்று

பார்வதி.

உரைத்தார்யில்லரந்தன்னை உண்மைநல்லரமென்று
பொருத்தமாயானுங்கேட்டு புத்தியில்கொண்டேனன்று

நாரதர்.

நன்றானயில்லரத்தை நடத்தும்விதந்தனக்கு
உண்டானமுறைசிவன் உரைத்ததைசொல்லெனக்கு

பார்வதி.

சொல்லுவேன்மனதொத்து தோகையும்புருஷனும்
இல்லரநடத்தவே யியம்பினாரீசனும்

நாரதர் விருத்தம்

சுந்தரியெனதுதாயே நீசொன்னதைவொப்புகொள்வோம்
இந்தநல்லுலகந்தன்னில் யெவளவோசாதிருக்க
எந்தெந்தசாதிதன்னை யெவரெவரொத்துக்கொண்டு
அந்தயில்லரனடத்த அரன்சொன்னதுரைசெய்வாயே.

வசனம்.

கேளுமம்மா தாயே நீங்கள் சொல்லியபடி வொத்துக்கொள்வோம் இந்த வுலகத்தில் யெவ்வளவு சாதிகளிருக்கிறது யெந்தெந்த



சாதி பெண்ணை யெவரெவர் கொள்ளுகிறது எப்படி இல்லரனடத்துகிறது சுவாமி சொன்னதை யெனக்கு சொல்லுமம்மா தாயே.

பார்வதி விருத்தம்.

வேதியனின்றெடுத்த வித்தகாபுவியில்பல
சாதிகளிருந்தாலுந்தான் சாதியில்பெண்ணைகொண்டு
நீதிநூல்முறைப்படிக்கு நிலையத்துதவறிடாத
பேதில்லாநடத்தயில்லம் பேரின்பவீடென்றாரே.

வசனம்.

கேளுமப்பா நாரதமுனியே இந்த வுலகத்தில் யெவ்வளவு சாதியிருந்தாலும் அந்தந்தசாதி ஆணும்பெண்ணுமாக கூடி மனமொத்து இல்லரநடத்திவந்தால் உடனே முத்திவீடென்று சொன்னாரப்பா நாரதமுனியே.

நாரதர் சொல்லல்-தரு.

ஈசன்சொன்னதை திரமெண்ணினாய்நீயும்
எல்லாஞ்சரியோசனை பண்ணினாய்
தேசமெல்லாம்பழிக்குஞ் சிவனடத்தைசொன்னாயே
மோசமோசனம்பாதே மொழிவேனான்பின்னாலே (ஈச)

பார்வதி சொல்லல்.

நம்புமடியவருக்குமெய்யவர்-இந்த
நங்கைக்குயேத்ததிவிய துய்யவர்
அம்புவிசிவருக்கு அருளும்பரமந்தன்னை
வம்புநடத்தைசொல்ல வருமோவுனக்குபின்னை (நம்)

நாரதர் சொல்லல்.

ஆசிரமஞ்சொன்ன சிவனாச்சுது-அம்மா
அவர்நடைபார்த்தா லிழிவாச்சுது
தாசிவீட்டையடைந்து தையலோடின்பங்கொண்டு
நேசித்தசிவன்வார்த்தை நினைக்கலாமாகண்டு (ஆசிர்)

பார்வதி சொல்லல்.

தேவர்கள்போற்றுந்திருபூவனம்-வாழும்
தேவதாசியிருக்குமாவனம்
மேவும்பொன்னனைதாசி மிடியதுதீரவே
சிவனாகன்சென்றார் செல்வமீடேறவே (தே)

நாரதர் விருத்தம்

அன்னையேயான்சொல்லுவது பொய்யேயானால்
அறிந்துபார்இன்னமொரு விஷயமுண்டு
தன்னையுமேசொன்னாலே வெளிச்சமாக
சகம்பழிப்புக்கிடமதுதான் கேளுமம்மா
உன்னையுமேபெண்ணாக கொண்டயீசன்
உனை மறைத்துவேர்பெண்ணை தலையில்வைத்து
நன்னயமுடனிருந்து சொல்லும்வார்த்தை
நம்புவதுயெப்படிதான் விள்ளுந்தாயே.

பார்வதி விருத்தம்.

அங்கமும்பதருதம்மா ஐயையோயென்னசெய்வேன்
சங்கரர்யெனை மறந்து தையலேதலையில்வைத்தாய்
எங்கதானடுக்குமம்மா யிவரிந்தப்படியேசெய்தால்
திங்களின்வதனியென்போர் சொல்லுமோவுலகில்தானே.



பார்வதி தாதிகளிடம் முறையிடுதல்-தரு.

இனியென்னசெய்வேன்டி யென்தாதி களா
யென்தன்மனம்பதருதடி யென்பாங்கி களா



களா
கனிவானசிவனாரும்யென்தாதி களா
கன்னியெனைவெருத்துயென்பாங்கி களா
தலையிலேபெண்ணைவைத்துயென்தாதி களா
சல்லாபம்அவளோடானல்யென்பாங்கி களா
அலையாயெந்தன்மனம்யென்தாதி களா
அரனரிப்படிசெய்தாயென்பாங்கி களா
அக்காவனிந்தோரும்யென்தாதி களா
என்னாசையைவெருத்துமேபாங்கி களா
சக்களத்திமேலன்புயென்தாதி களா
சுவாமியும்வைப்பாரோடியென்பாங்கி களா
நாதனிப்படிசெய்தால்யென்தாதி களா
நம்பலாமோஅவர்வார்த்தையென்பாங்கி களா
சூதையறியாமலேயென்தாதி களா
தோகையினுகாலம்வாழ்ந்தேன்பாங்கி களா
ஈசன்யெனைமறந்தால்யென்தாதி களா
இருப்பனோபுவிமீதுயென்பாங்கி களா
மோசந்தெரியாமலேயென்தாதி களா
மெய்யென்றுயிருந்தேனடியென்பாங்கி களா
என்னைவிடமாதரேயென்தாதி களா
இச்சிப்பாரென்றறியேன்பாங்கி களா
பொன்னனையாள்வருமைதீரயென்தாதி களா
போனதுபொய்தானடியென்பாங்கி களா
மங்கையெனைமறந்துயென்தாதி களா
மறு-மாதரைவைத்திருந்தால்யென்பாங்கி களா
எங்கமதிப்பாரோடியென்தாதி களா
ஈசனென்றபெயரேண்டிபாங்கி களா
கவனமும்வந்ததடியென்தாதி களா
காணவேண்டுமவரைநாம்பாங்கி களா
அவரருகில்வந்தமடிதாதி களா
அறிகுவேன்சேதியிப்பபாங்கி

விருத்தம்.

ஆசீர்மகாலிலொன்றி அடையலாமுத்தியென்று
ஈசனேசொன்னவார்த்தை யெப்படிவொத்துகொள்வோம்

மோசமுந்தெரியலானேன் முதல்வரேயென்மேல்வைத்த பாசமும்வெருக்கலாமா பரமரேதருமந்தானு.

பரமசிவன் சொல்-தரு.

பெண்ணேயிதுவென்னுமோசம்-யெந்தன்
பேதைகுணத்தின்விசுவாசம்-வைத்து
பேசவந்ததுமகாரோஷம் மகாரோஷம்
கண்ணேயென்மனமுந்தன்வாசம்நான்
கருத்தினில்வைத்தனேநின் பாசம்நீயும்
காணுமலுரைப்பதுநேசம் நல்லநேசம்.

பார்வதி.

ஐயாஉந்தனிடரூதா ஐயாஉந்தனிடரூதா
அறிந்துகொண்டனிந்தமாதே
அடுக்குமேநடக்கின்றமாதே
மையாடுங்கண்டாயிப்போதே
மையாடுங்கண்டாயிப்போதே
மனமும்வேறுபட்டதேதே
மங்கையேசெய்தாதிதேகெட்டதிதே

பரமசிவம்.

தேவியேயெந்தன்மடமானே
தேவியேயெந்தன்மடமானே
தெவிட்டாதினிக்குஞ்செந்தேனே
சித்தத்தில்மறப்பனேயானே
காவியங்கண்ணுளானே
காவியங்கண்ணுளானே
கருத்தேகோவிலெனக்குதேனே
சொன்னகாரணந்தானறியேனே அறியேனே

பார்வதி.

அறிவேனறிவேனுந்தன்சேதி
அறிவேனறிவேனுந்தன்சேதி
அறியலானேன்காணும்நீதி
அருவையாளினிமேலேவாதி



உனக்குவாதி
எரியுதேஎன்மனமோதி
யில்லாதவளோநானனுதி
யினிக்குமோகசப்பாமித்தாதி இத்தாதி

பரமசிவம் விருத்தம்.

நாரணன்தங்கையான நாயகிவெறியன்போலே
காரணமொன்றில்லாமல் கடினமாய்பேசலாமோ
ஆணபடிக்கிநீயும் யரிவித்தாயின்னதென்று
பூரணமாகயானும் பொற்கொடிதெரிந்துகொள்வேன்.

வசனம்.

கேளும் பெண்ணே பிராணநாயகி நீயாதொரு காரணமுமில்லாமல் யிப்படி கடினமாக பேசலாமோ உன்னையறியாமல் நடந்த சங்கதியை வெளிச்சமாகச் சொல்லும் பிராணநாயகி.

பார்வதி விருத்தம்.

ஆசிர்மம்நாலுஞ்சொன்னீர் அத்தவர்போலநீரும்
தாசிகள்தோழனைப்போல் தலையிலேபெண்ணைவைத்து
நேசித்துஅவள்தன்னோடு நெஞ்சமுங்களித்திருந்தால்
காசினிக்கடுக்கோயென்னை கடக்கவேவிட்டீர்நாதா.

வசனம்.

கேளுமையா சுவாமி பிராணநாயகா யாதொரு குற்றமில்லாத மனமுடையவர்போலே நான்குஆசிர்மத்தைச் சொன்னீர்நீரேயென்னைவைத்து உந்தன்தலையிலே ஒருபெண்ணை வைத்துக்கொண்டிருக்கிறீர் நான் உன்னுடைய வார்த்தையை யெப்படி நம்புவது அதற்கு விபரஞ்சொல்லும் பிராணநாயகா.

பரமசிவம்-தரு.

தையலேயென்னுமோசம் தலையிலேபெண்ணைவைத்து
தரணியிலிருப்பாரா பார்வதியே.

பார்வதி.

ஐயனேஉந்தலைமீது அருவையாளிருக்கிறாள்
அவளாரோசொல்லுமையா பிராணநாதா.

பரமசிவம்.

அருவையாளல்லசொன்னேன் அலையெரியுஞ்சலமே
அதுதலைமேலிருக்கும் பார்வதியே

பார்வதி.

பரவைசூழுலகாளும் பரமனேசலமென்றீர்
பரிசுத்தமுகமுண்டோ பிராணநாதா

பரமசிவம்.

தாமரைமலரது தையலர்ள்முகம்போலே
சலத்தில்தெரியுமோதான் பார்வதியே

பார்வதி.

மாமறையுரைத்திடு மாதேவாசலத்திற்கு
மையிடும்விழியுண்டே பிராணநாதா

பரமசிவம்.

தோயத்தில்காவிமலர் தோகையர்கண்போலே
சுத்தமாதெரியும்பார் பார்வதியே

பார்வதி.

தாயொத்ததயவுள்ள சங்கரதேவரே
சலத்தில்தாதுகளுண்டோ பிராணநாதா

பரமசிவம்.

வஞ்சியேநீனில் வள்ளல்கொடிசெவிபோல்
வளருமேயென்னாளும் பார்வதியே

பார்வதி.

பிஞ்சுள்ளமதியணி பெம்மானேநீருக்கு
பேசும்வாய்களுமுண்டோ பிராணநாதா

பரமசிவம்.

ஏந்திழைஆம்பலும் யிருக்குமேவாய்போலே
இப்போதெரிந்துகொள்ளும் பார்வதியே

பார்வதி.

கூந்தலுங்கொங்கையுங் கூறுநீருக்குமுண்டோ
கோதையரியசொல்லும் பிராணநாதா



பரமசிவம்.

பாசையுங்குமழியும் பார்வைக்கிஅவ்விதமாய்
பாவையேசலத்தில்காணும் பார்வதி

பார்வதி.

ஆசையுமத்ததினால் அவள்மேல்பிரியம்வைத்து
அல்லாம்பொய்யாபேசுரீர் பிராணநாதா

சீசபத்தியம் பரமசிவம்.

உத்தமியாளேகேள் உண்மையாய்சொல்குரேன்
உரைப்பதுபொய்யல்ல எண்ணிபாரும்

பார்வதி.

கர்த்தனேசொல்வது கன்னியர்க்கேர்க்குமோ
கண்ணாளாஉமக்குள்ளே நண்ணிபாரும்

பரமசிவம்.

எத்தனைசொன்னாலும் யேர்க்காமலிருப்பது
இதுஉனக்கழகல்ல வழக்கந்தானா

பார்வதி.

அத்தனேஉந்தலைமீது அருவையைவைத்துமே,
அல்லாம்பொய்பேசுவது பழக்கந்தானா

பரமசிவம்.

அப்படியேபெண்ணிருந்தா லவற்கென்னாயிப்போ

பார்வதி.

மெய்ப்படநான்கேட்பது மிகவுந்தப்போ

பரமசிவம்.

கைப்பிடியாள்கங்கையவள் கண்டுநில்லும்

பார்வதி.

எப்படியும்யானிருக்க அவள்யேனோசொல்லும்

பரமசிவம்.

தப்பிதமிருந்தாலும் பொருத்துகொள்ளும்

தரு-பார்வதி.

சொந்தமாயானிருக்க யெந்தமதியால்பெண்ணை
கொண்டீர் தலையில் கொண்டீர்

இந்தமதியாலல்ல வந்தவிஷத்தைவாரி
  யுண்டீர் வாரி யுண்டீர்

பரமசிவம்.

உண்டுவிஷத்தையானும்விண்டலத்தோரைகார்த்தேன்
  நில்லும் நீயும் நில்லும்
கண்டவர்பழிக்கமண்ணை உண்டதமயன்வார்த்தை
  சொல்லும் பதில் சொல்லும்

பார்வதி.

சொல்லுமுலகந்தனில் நல்லபூஷணமணி
  யிருக்க யெங்கு மிருக்க
கொல்லும்பாம்புகளைவாரி வல்லவர்போலணிந்தீர்
  பெருக்க உமக்கு பெருக்க

பரமசிவம்.

பெருக்கும்பஞ்சணைமெத்தை யிருக்கவுலகந்தன்னில்
  தேடி தமயன் தேடி
செருக்கும்பாம்பினில்படுத்தார் கரக்கும்ரூபமுபென்னும்
  கோடி அகில கோடி

பார்வதி.

கோடிகோடியாசெல்வம் மாடிமாடியாவுண்டு
  தாண்டி யதை தாண்டி
ஓடிவீடுகள்தோறும் தேடிபிச்சையெடுத்த
  ஆண்டி நீயும் ஆண்டி

பரமசிவம்.

ஆண்டியாபோனதினால் மூன்றுலோகமுங்கெடி
  நாதன் பெத்த நாதன்
தாண்டிதப்புகள்கொட்டி வேண்டியபிச்சைகொண்ட
  தாதன் தமயன் தாதன்

பார்வதி.

தாதவிழ்தாருகாவன மாதுகர்ப்புகள்தன்னை
  கெடுக்க நீயும் கெடுக்க



வேதவழியுமில்ல பாதகமாகாதுஉனக்
  கடுக்க இது அடுக்க

பரமசிவம்,

அடுக்காயுரைப்பேன்யானு மடக்கொடியாளே
  கிட்டவாரும் இங்க வாரும்
முடுக்குரெட்டிப்பாகவே துடுக்காதமயன்செய்தா
  பாரும் பெண்ணி பாரும்

பார்வதி கந்தார்த்தம்.

அண்ணலேஅடியாள்சொல்ல அததர்க்கெட்டியாக
வண்ணத்துக்கிண்ணஞ்சொன்னீர் வஞ்சிமேல்பிரியம்வைத்து
பெண்ணவன்உனக்காகாது பேதவும்வேண்டாமிப்ப
திண்ணமாயெண்ணிக்கொண்டு திரும்பிநீபோகாதையா.

தரு.

தேவாநிருத்திடுவீர் இன்றுமுதல் மேவாநிருத்திடுவீர்
போவாகங்கையிடத்தில் புண்ணியாநீயெனக்கு
ஆகாதுசொன்னேன் சொன்னேன்
அப்புரம்நின்றுவிடும் தேவர்.

பரமசிவம் கந்தார்த்தம்.

அன்னமேசொன்னசொல்லு ஆதியாமுதல்துடங்கி
சொன்னதுபொய்யானாலுந் தோகையேமனம்பொருத்து
என்னையுங்கண்ணால்பார்த்து யிரக்கமும்வைத்துநீயும்
மன்னிக்கவேண்டுமென்று மலரடிபோற்றிநின்றேன்.

தரு.

மலரடிதன்னில்பணிந்தேன் பரமன்யானும் (மலரடி)
பலகலைபோற்றுமீசன் பணியவேபாம்புசந்திரன்
விலகில்லாகங்கையாளும் விமலன்யென்னுடன்விழ (மல)

தரு.

ஐயையோயிதுவென்னமோசம் அரனேநீர்போட்டவேஷம்
தையலர்காலிலே சங்கரர்வீழ்ந்ததாலே
வையகம்பழிக்காதோ மாதேவாதாழ்ந்தாலே (ஐயை)

பரமசிவம்.

அம்பிகைகோபமும்ஆறவே அவள்பதம்பணிந்தன்யான்நீறவே
இன்பம்பெற்றன்மேலே வந்ததோயில்லையே
நம்பியேதொழுதேன்யான் நங்கையாள்சொல்லையே (அம்)

நாரதர்.

இதுவென்னபெரும்பழிஐயா
தாய்க்குயேன்கோபம் வரலாகுமெய்யா
புதுமையாயிருக்குது புண்ணியாவுரைப்பதி
மதுமலர்சூடிய மங்கையாள்முரைப்பது (இது)

பார்வதி.

அலைமாதுசடைதனி லிருப்பதைக்கண்டுஅம்மன்
கேழ்க்கச்சொன்னேன் மறைத்ததை
உலைவாய்மெழுகைபோல உருகியமனம்வாடி
விலகிநில்லுமென்றுள் விடுத்தேன்வந்தனனடி (அலை)

நாரதர்.

அம்மம்மா இதுநல்லநாயம்-இப்ப
அரனும்செய்ததனியாயம்
அம்மாவுன்னைக்கொல்ல ஆர்கண்ணால்பார்ப்பார்கள்
செம்மையாயிருக்குது சிவனையார்யேர்ப்பார்கள் (அம்)

பார்வதி.

கலக்கமுஞ்செய்யாதே நாரதா-எந்தன்
கருத்துமழிந்தேன் வீண்போதா
விலகில்லாசிவன்மனம் வெருக்கவும்போகுமா
குலுக்கென்றுவீழ்ந்தாரே குத்தமதாகுமா (கலக்)

நாரதர்.

குத்தமேஅவர்பணிநீம்பு உன்னை
கொத்தசெய்தார் பெரும்பாம்பு
குத்துமேயிளம்பிறை கூரிருகொம்பாலே
யித்தைநம்பினலே இருப்பாயோபுவிமேலே (குத்)

பார்வதி.

திங்களுக்குத்திங்களாகும் ஐயா உன்
திருவடிக்கோர் சரணஞ்செய்தேன்.



இங்கசிவனாரும் யெனக்குவீழ்ந்ததே (திங்)
கங்கையும்பணிந்தாளே கருத்துமழிந்ததே

நாரதர்சொல்-விருத்தம்.

மாசற்றமனத்தாளான மங்கையெந்தாயேகேளும்
ஈசனுமுனைப்பணிய யினிசும்மாயிருக்கொண்ணாது
பாசமும்போக்கியாளும் பரமனைபணிந்துபோற்றி
நேசித்துகொள்ளுமம்மா நிலைக்குமுன்வாழ்வுதானே.

பார்வதி-தரு.

கங்கையேசடையில்வைத்த பிராணநாதா
மங்கையாளுன்பதம்பணிந்தேன் ஆளும்வேதா
திங்களணிந்தயீசா தெரிவைக்கிசைந்தநேசா (கங்)
சங்கரதேவாவாசர் தையலேகாருந்தேசா

பரமசிவம்.

அன்னமேசந்தோஷமானேன் கிட்டவாரும்
முன்னமேநான்பேசும்வார்த்தை யெட்டசேரும்
வன்னகிளியேமானே வாழிதந்தனேதேனே
சின்னயிடையாளானதே சுயம்பிரகாசமானே (அன்)

பார்வதி.

கஞ்சனார்சிரத்திலொன்றை அடுத்தகையா
பஞ்சமலர்பாணந்தன்னை யெரித்தஐய்யா
வஞ்சியர்க்கானதேவா வாழுமுலகங்காவா
அஞ்சலிசெய்தேனீவா அடியவள்தனக்குபாவா

பரமசிவம்,

அருமறையுணருமெந்தன் பிராணசேடி
இருவருமனமொத்து மிகவேகூடி
பொருப்புகைலைமேவி யிருப்போமனதாதேவி
பிரப்பில்லாஅன்பர்தாவி பேசுவார்யென்றுங்கூவி (அரு)

பார்வதி-விருத்தம்.

அன்புள்ளபிராணநாதா அடியவள்மனமகிழ்ந்தேன்
இன்பமாகனிகளொன்று யிருப்பதுயேதுநாதா.

பரமசிவம்-விருத்தம்.

நன்மையாபிரணீய நாரதர்யெனக்குதந்தார்
பண்புசேர்பாலக்கித்தை பட்சமாய்அளிக்கலாமே.

பரமசிவம்-விருத்தம்.

அருமறைமுனியேஉன்னால் ஆனதோர்கலக்கமெல்லாம்
திருவிளையாட்டாநாங்கள் செய்யவுங்கண்ணால்பார்த்தீர்
குறைவில்லையிதுநாலொன்றுங் குணமுடனீயுஞ்சென்று
பருவமாம்பாலர்தம்மை பட்சமாய்அழைத்துவாராய்.

வசனம்.

ஆனால் கேளுமப்பா நாரதமுனியே உன்னாலான கலக்கமெல்லாம் நாங்கள் திருவிளையாட்டாக முடித்துக்கொண்டோம் இதனாலே யாதொரு குற்றமுமில்லை நீர் விரைவாகச் சென்று நமது குமாரர்கள் விநாயகர் சுப்பிரமண்யம் இருவர்களையும் அழைத்துவாரும் நாதா.

விநாயகர் சுப்ரமண்யர் வருவது விருத்தம்.

அத்தியினுருவாவந்த அருமறைபுதல்வர்கூட
சுத்தினுங்கணங்களோடு சூழ்ந்துகோட்டங்கள்பாட

சுப்ரமண்யர்.

சத்தியினுருவாவந்த சண்முகப்பெருமாள்தானும்
கர்த்தனைக்காணவேண்டி கனமுடன்வருகின்றாரே.



தரு-விநாயகர்.

பிரணவவடிவானசீலனும் பேருலகினில்யாரும்போற்றவே
பித்தர்பாதத்தைநினைத்தம்யெத்தவே பெரியவனுய்வந்தசீலனும்



சருணமென்றெவருந்தாளில்வீழவே
சர்வகணங்களும்பக்கத்தில்சூழவே
கருணைவளர்சிவன்தன்னையேகாணவே
கஞ்சமலர்முகம்யெங்குந்தோணவே (பிரண

ஐந்துகரமுந்துலங்குநாதனும் அங்குசபாசமும்
யெங்குங்குலங்கிட துங்கமாமார்பினில்பூணூலுமிலங்கிட
ஆரணங்கள் அலங்குனீதனும்
தொந்திவயர்மீதுதுதிக்கையுமாடவே
சுத்தியிடுப்பினில்கிண்கிணிசாடவே
முந்தியமாமறைமுனிவர்கள்பாடவே
மூஷிகமீதேறிவாராரேநாடவே (பிரண



85917

சுப்ரமண்யர்-தரு.

வந்தார்வந்தார்வடிவேலர் வாறார்வாறார்படியாளர்
சிந்தாகுலத்துக்கொருகாலர் சீவனைகாக்கயிவர்மேலோர்
வேழமுகத்துக்கிளையவர் வெவ்வியவினைகளைகளைபவர்
ஆழகடலைகரைத்தவர் ஆணவமாயையறுத்தவர்
கும்பமுனிக்குகுருநாதர் குவலயந்தனக்குயிவர்சாதர்
நம்புமடியவர்க்கடியவர் நம்பாதவருக்குகொடியவர்
தந்தைக்கானசிவகுருவாம் சங்கரிஸ்ரூபதவவுருவாம்
சிந்தைகியானமானவர் தேவர்க்கருளுமோனவர்

கொஞ்சிகுப்பந்துரைசாமி கோரியேதுதிக்கயிவர்சுவாமி
வஞ்சியிருவர்தன்னேமி வாசவர்குரவர்க்குரவாமி (வந்)

நாரதர் விருத்தம்.

அந்தியின்முகவாவேலா உங்களடியிணைபோற்றிபோற்றி
பத்தியாபிரமதேவன் பழமொன்றுயெனக்குத்தந்தார்
சித்தமாய்சிவனுக்கீய்ந்தேன் சிவன்வாங்கிசிறுவர்க்கென்று
உத்தமன்வரவேசெய்தார் வோடியேவாங்கிக்கொள்ளும்.

வசனம்.

மகா பிரணவஸ்ரூபியாகிய விநாயகரே சத்திஸ்ரூபியாகிய சுப்ர மண்யதேவா உங்கள் இருவர்களுடைய பாதங்களுக்கு நீர்க்கவந்த னஞ்செய்து சொல்லுகிறேன் சத்தியலோகபதியாகிய பிரமாயென க்கு கனியொன்றுதந்தார் நான் பரமசிவத்திற்குத் தந்தேன் பரம சிவம் பிள்ளைகளுக்கு தருவோமென்றுசொல்லி உங்களை வரச்சொன் னார் நீங்கள்சென்று வாங்கிக்கொள்ளுங்கள்தேவா.

தரு விநாயகர்,

என்ன கனியதுநாரதா யெனக்கு உரைத்திடும்போதா
நார-நன்னுகுமாங்கனிநேரதா நான்தந்தேன்சிவனுக்குசீரதா
சுப்ர-மாங்கனியென்பதுமெய்தானா மாதுளங்கனிசொல்மெய்தானா.

நாரதர்.

மாங்கனியென்றாலேமெய்யாகும் மாதுளங்கனியென்றால்பொய்யாகும்
விநா-கலகஞ்செய்வோமென்றுவந்தியா கனிசிவன்கைதனில்தந்தியா
நார-தலக்கும்ளமர்ச்சாதெரியுமா சுத்தமாபோய்பார்த்துஅரியுமே
சுப்-தெரியுமேமுன்சேதிநெடுநாளா நீங்கனிவுண்மையோவடிவாளா
நார-அரியுமேநான் செய்யும்வேலையா அப்படிசெய்வதுஆரய்யா
விநா-இப்படிநீவாரும்போகலாம் யீசன்கனியைவாங்கிபார்க்கலாம்
நார-அப்படிவொத்தல்லவரவேணும் அந்தசிவனருள்பெறவேணும்
சுப்-கூரும்சிவன்கனிபேருக்கு குடுப்பதுயிருவரில்யாருக்கு
நா-ஆர்முன்னேநேர்ந்தாலும்வல்லவா அவருக்குதருவார்நான்சொல்
விநா-நல்லதுமுன்போவோம்வாரும் நாரதாயென்கிட்டநேரும்[லவா
நார-வல்லவாமுன்போய்சேரும் வருகிறேன்பின்னால்பாரும்
சுப்-என்கூடநட்ந்துவாபார்ப்போம் யெல்லோர்க்குமுன்சென்றுசேழ்ப்போம்
கா-நான்வரவேணுமென்றேர்க்காதே நடவும்பின்வாரேன்பார்க்காதே



விநாயகர் விருத்தம்.

மூவருமறியாநித்திய முதுமறைபொருளானால
சிவனுயகமாய்வந்த திருவடிக்கடியேன்போற்றி.

சுப்ரமண்யர் விருத்தம்.

தேவர்கள்சிறையைமீட்க செல்வனுயளித்தவுந்தன்
தாவும்பொற்பாதந்தன்னில் தனையனுன்போற்றிசெய்தேன்.

பரமசிவம் விருத்தம்.

ஆரணபொருளாய்வந்த அருமைகண்மணியேமுந்தும்
வாரணமுகத்தோய்வேலா மைந்தனேவாழிவாழி
நாரணன்பேரந்தந்த நருங்கனியிதனைபோதே
தாரணிதனிலுமில்லை தனையனேபாருமப்பா.



தரு-விநாயகர்.

இந்தகனியைபோலவே யெந்தந்தையாரே-எங்கு
மரியனமேலவே சிந்தைமிககளித்து
சிவனேயெனக்குதந்தால் ஐந்துகரத்தாலும்வாங்கி
ஆசையாகவைத்துக்கொள்வேன். (இந்த)

சுப்ரமண்யர்.

கருணைபிரகாசமூர்த்தியே இந்தகனிபோல்
காசினியில்யில்லைநேர்த்தியே அருணவடிவழகான
அருங்கனிதனக்காக தருணஞ்சரணஞ்செய்தேன்
தனையன்யெனக்குதாரும் (கரு)

பரமசிவம்.

அருமைமைந்தரேகேளுமே சொல்லுவேன்யானுமே
அன்பாக கண்டுமீளுமே
இருவருமனமொத்து யென்னிடம்வந்தாலே
தருவேனுன்உங்களுக்கு தன்கனிசந்தோஷமா (அரு)

விநாயகர்.

சோமன்வளருஞ்சடையா இந்தகனியை
சொந்தமா யெனக்குகொடய்யா
காமனையெரித்தநாதா காலனையுதைத்தபாதா
காமதஞ்செய்யாமல்தாருஞ் சங்கரதேவரே (சோ)

சுப்ரமண்யர்.

என்னைகண்ணினால்பாருமே இந்தகனியை
யெனக்கு சொந்தமாதாருமே
பன்னிருகரங்கூப்பி பாதந்தனில்பணிந்தேன்
சின்னஞ்சிறுவன்யானும் சிந்தைதயவுவைத்து (சின்)

பரமசிவம்.

இருவரும்பிள்ளையிருக்க இந்தகனியை
யெவருக்கு தருவேன்பெருக்க
ஒருவர்க்கொருவராக உனக்குயெனக்கென்றாலே
அருமைகனியையிப்ப ஆருக்குஅளிப்பது (இரு)

நாரதர்.

எந்தனால்வந்தவழக்கம் யிருவருக்கும் இந்தகனியாலிருக்கும்
முந்திபிறந்தநீயே முழுதும்உனக்குசொந்தம்
அந்தனேகணபதிக்கிகொட்டாதேநீ வாங்கிக்கொள்ளும் (எந்)



பரமசிவம்.

எல்லாந்தெரியுநாதா யிதுசமயம் யெட்டவில்லுநீவேரதா
பொல்லாங்கு உன்னாலாகும் போப்போநீசொல்லவேண்டாம்
செல்லாகாரியங்குட்செல்லும் செல்லாதென்றாலே (எல்லா)

இந்துஅணிந்தயீசனே உங்களுக்குயெல்லாஞ் சரிதானேசனே
பிந்திபிறந்தநீயேபெருங்கனி உனக்குசொந்தம்கந்தனே
கணபதிக்கிகொட்டாதே நீவாங்கிக்கொள்ளும் (இந்து)

சீசபத்யம்-சுப்ரமண்யர்.

தந்தையேதயவுசெய்தேனையா னன்வந்தம்
தன்கனிசொந்தமாயென்க்குதாரும்

விநாயகர்.

எந்தையேகிருபைசெய் யிருதாளைபோற்றினேன்
இக்கனிசொந்தமா யெனக்குதாரும்

பரமசிவம்.

மைந்தனேயிருவரு மனமொத்துகனியதை
மகிழ்ச்சியாவாங்கினி வைத்துகொள்ளும்

சுப்ரமண்யர்.

சிரியவனுனக்குஞ் சிந்தையுங்களித்துமே
தீங்கனியெனக்காக கொடுப்பீரையா

விநாயகர்.

பெரியவனுனக்கும் பித்தரேகளித்துமே
பெருங்கனியென்கையில் விடுப்பீரையா

பரமசிவம்.

உரியவேகொல்குரேன் ஒருவர்க்குதந்தாலே
மற்றொருவர்க்குகுத்தமாம் வோர்ந்துபாரும்

சுப்ரமண்யர் சொல்—முடுக்கு.

எத்தவன்யானுக்கும் யெனக்குவேண்டும்

விநாயகர்.

மூத்தவன்யானுக்கு முக்கியம்வேண்டும்

சுப்ரமண்யர்.

மூத்தவனாயிருந்தாலும் யெனக்குயென்ன

விநாயகர்.

ஏத்தவனாயிருந்தாலும் யெனக்குயென்ன

சுப்ரமண்யர்.

நேத்தியசங்கதி நினைந்துகொள்ளும்

விநாயகர்.

ஆத்திரமில்லாம லமர்ந்துநில்லும்

சுப்ரமண்யர்-தரு

தொந்திவயருனக்கு யிந்தகனிவேண்டுமா
தோணாதே-பவிஷ-காணாதே

விநாயகர்.

எந்தன்பவிஷிக்காக யெல்லாவருங்கேயேந்துவார்
எட்டாதே-கனி-கிட்டாதே

சுப்ரமண்யர்.

அங்கஜனும்உன்னைக்காண அஞ்சுவானேஆனைவாயா
அலப்பாதே-சும்மா-கலப்பாதே

விநாயகர்.

பங்கயமாய்உன்னழகை பார்த்தவர்பழிக்கின்றாரே
பனுக்காதே-சும்மா-குனுக்காதே

சுப்ரமண்யர்.

நாட்டில்தழைதின்னானைக்கி நல்லகனியோர்க்குமோதான்
நல்லதே-யின்னம்-சொல்வதே

விநாயகர்.

காட்டில்வாழுங்குரவனுக்கு கர்த்தங்கனிதகுமோ
கத்தாதே-பந்தி-சுத்தாதே

சுப்ரமண்யர்.

எழுமுழந்துதிக்கையது யிருக்குதேபழுதாக
ஏர்க்கலாம்-எண்ணி-பார்க்கலாம்

விநாயகர்.

பாழும்விழிபணிரெண்டும் பழுதாகயிருக்குதே
பார்த்தியா-நல்ல-கீர்த்தியா



சுப்ரமண்யர்.

பெருமுரம்போல்காதுனக்கு பேசுதேயிருபுரமும்
பிரியுமே-சொல்ல-தெரியுமே

விநாயகர்.

வெகுமரத்தின்போரைபோல விளங்குதேசெவியுனக்கு
விள்ளவே-சொல்லி-கொள்ளவே

சுப்ரமண்யர்.

பார்புத்துயெழுகாலுள்ள பகருமிருகமாச்சே
பாடுரு-விளை-யாடுரு

விநாயகர்.

நார்பத்துகால்பூச்சியென்று நல்லாசொல்லலாம்உம்மை
நாடாதே-சும்மா-ஓடாதே

சுப்ரமண்யர் கந்தார்த்தம்.

எத்தனைநாள்சொல்லசொல்ல யெனக்குமேபழுதுசொன்ன
அத்தியின்முகவாவுன்னை அரிகுவேன்பாருமிப்போ
குத்தமாய்சொல்லவந்த குறையதினாலேயெந்தன்
சித்தமுங்கொதித்து மீரி

தரு.

செவியைபத்தியேகிள்ளினேன் வெகுண்டெழுந்து
தவிக்குறாய்நீயும் யென்னதாக்ஷி
சொன்னதாலனுபவிக்குறு பார்ப்பவர்கள்பழிப்புக்கிடமாகவே

தரு-விநாயகர்.

ஐயாயெந்தன் காதைகிள்ளினானே
அருமுகவனை நீ கேளுமையா

பரமசிவம்.

செய்யாதகாரியத்தைநீயும் செய்யலாமோவடிவேலனே

சுப்ரமண்யர்.

ஒய்யாரமாகயென்கண்களை ஒன்றுரெண்டென்றுஎண்ணினானே

பரமசிவம்.

ஆனைமுகத்தோனேநீயு மப்படிவிகுடகுஞ்செய்யலாமோ

விநாயகர்.

மோனவடிவமுள்ளயெனனைமுழம்யோட்டு துதிக்கைஅளந்தானையா

பரமசிவம்.

கந்தாஉனக்கேனிந்தகாரணம் கையால்துதிக்கையைஅளக்கலாமா

சுப்ரமண்யர்-தரு.

எந்தாயிவர்யென்னைபழித்துயேனென்று அவரைநீகேளுமையா

பரமசிவம்.

மாதேயெந்தன்பார்வதிநிந்தன்மைந்தர் விளையாட்டைப்பாரும்பெண்ணே

பார்வதி.

நாயகாயெந்தனுபகரேயிவர் நாயமுநல்லாயிருக்குதிப்போ

பரமசிவம்.

பெண்ணேயென்பெண்மணியே மூத்தபிள்ளைகோபமாத்துவாயே

பார்வதி.

கண்ணேயெந்தன்கண்மணியே உங்கள்காரணத்தைபார்த்துமகிழ்ந்தேன்

விநாயகர்.

தம்பியடித்தானம்மாதாயே சனுவையவனுக்குயிருந்ததினால்.

சுப்ரமண்யர்.

வெய்பியழுதாலேயானுமே வேண்டுஞ்சனுவையெனக்குமுண்டு

பார்வதி விருத்தம்.

அப்பனேஉந்தன்வார்த்தை அமுதம்போலிருக்குதிப்ப
செப்புவேன்சிரியோர்செய்த சிருபிழைதனையெடுத்து
இப்பயென்மடியின்மீது யிருந்துமேயிதற்குமேலே
எப்படிநடக்கைசொல்லும் யிவ்விடம்போல்நடத்துவோமே.

வசனம்.

கேளுமப்பா கண்மணிஉன்னுடைய வார்த்தையானது செவிக்குயின்பமாயிருக்கின்றது. தம்பிசெய்த பிழையைபொருத்து யென்மடியின்மீது யிருந்து உனதுயிஷ்டத்தை சொன்னால் அவ்விதமாக நடந்து கொள்ளுகிறோமப்பா மகனே.

விநாயகர் விருத்தம்.

பல்லுயிர்காக்குந்தாயே பரமனார்கனியதார
சொல்லுவாய்சந்தோஷமாக சுந்தரிவுன்தாள்போற்றி.

சுப்ரமண்யர் விருத்தம்.

மல்லுக்குமுடியுந்தாயே மாங்கனிஅதையெனக்கு
இல்லையென்பாரோயீசன் யெவ்விதமுடியும்பார்ப்போம்



பரமசிவன் விருத்தம்.

மாசிலாமைந்தரேகேள் மனமதுகலங்கவேண்டாம்
காசினியெல்லாமொற்ற கணத்துளேவலமாய்சுற்றி
தேசிகாயார்வந்தாலுந் தீங்கனியவர்க்குசொந்தம்
பேசியசொல்லைமாற்றேன் பிரியமாயேகுவீரே.

வசனம்.

கேளுமப்பா மைந்தர்களே நீங்கள் ஒருவருக்கொருவர் வழக்கிடவேண்டாம் இந்தவுலகத்தையெல்லாம் ஒரு கணத்துக்குள்ளே சுற்றியார் முன்வருவீர்களே அவருக்கு யிந்தகனியை சொந்தமாகத் தருகிறேனப்பா மைந்தர்களே.

விநாயகர்சொல் விருத்தம்.

கர்த்தனிவ்வார்த்தை சொல்லசந்தோஷமாகி
கணபதிதானெழுந்திருந்து தனியேசென்று
சுத்தமுள்ளமுஷிகத்தின் முதுகிலேரி
தொல்லுலகஞ்சுற்றமன மகிழ்ந்திருக்க

சுப்பிரமணியர்.

சத்திவடிவேலவருஞ் சந்தோஷமாகி
தந்திமுகன்தனக்குமுன் வருவோமென்று
வெத்திபெருமயில்தன்னில் யேரிகொண்டு
வேலைசூழுலகஞ்சுற்ற விரைந்திட்டாரே.

விநாயகர்-தரு.

ஆனந்தசந்தோஷமாகி விநாயகர்
அன்பாமூஷிகமேரி கொண்டாரே
தென்பாஉலகஞ் சுற்றிவிண்டாரே
கந்தனன்தனக்குமுன் கனியதைநாம்வாங்க
கடுகிநடந்திடுவாமூஷிகமே முடுகிநடந்திடுவாகனமே
பெருச்சாளிநடையது பின்வாங்ககணபதி
பெருமோசம்வருமென்று யிரங்கினாரே
நருங்கனிகிடைக்காதென்று உரங்கினாரே
தந்தியின்முகவனார் தந்திரமாகவே
சங்கரர்தன்னையே வலஞ்சுற்றினாரே
செங்கரகனியகேழ்க்க நத்தினாரே

விருத்தம்.

உலகமுமுயிருநீயே ஒளிமணிவிளக்குநீயே
பலகலைவேதசாஸ்திரம் பரவைகரள்வன்னிநீயே
இலகுஆகாயவானம் யெல்லாமுநீரேயென்று
வலமாகசுற்றிவந்தேன் வள்ளலேகனியேதாரும்.

வசனம்.

கேளுந்தந்தையே சராசர பிரபஞ்சமயமா விபாபித்து வஸ்துவானபடியால் நீரே உலகமாகிவிட்டது. ஆகையால் தங்களையே வலமாக சுற்றினேன் யெனக்கு மாங்கனி தாருமையா சுவாமி.

பரமசிவம்-தரு.

ஐங்கரனேவாருமே அருகில்வந்துசேருமே
செங்கனியேபாருமே தின்னமுனக்குநேருமே
வலமாகசுற்றிவருகவே மனதிலின்பம்பெருகவே
நலமாகனியதுதருகவே நானுங்களிந்தேன்உருகவே
கஜமுகனுக்குகாலனே கனியகொள்ளுஞ்சிலனே
திசையசுற்றம்பாலனே தேவர்கட்குவேலனே
தந்தேன்கனியைநேர்த்தியா தாங்கிகையில்பார்த்தையா
இந்தயிடத்தில்மூர்த்தியா யிருப்பாநீயும்பூர்த்தியா

சுப்ரமன்யர்-சிந்து-தரு.

சங்கரற்சொற்படியே வேலர் சடுக்கென்யெழுந்தாரே முடுக்குடனே தங்கமயில்வாகனத்தில் ஏறி-தலமெல்லாஞ் சுற்றிவர மேலதாகவே கரிமுகக்கணபதியும் யெழுந்து காசினியேசுற்றிவர யோசனையா திரமேது அவருக்கு உலகஞ்சுற்றி சித்தமுடன் கனிவாங்க புத்தியில்லையா நானே யிவ்வுலகமெல்லாஞ்சுற்றி நக்கனிடகனிகொள்வேன் பக்குவமாகவே மானவர்தான் வசிக்கும் இந்த மண்ணுலகம் விட்டு மிகயெண்ணமுங்கொண்டு பாதலமேழுங்கண்டு கனிஷ்டம் பார்த்துமே மேலெழுந்தார் தோற்றமாகவே பூதலந்திவுமலை யெழுகடலும், பொங்கும் புரக்கடல் யெங்குமேபார்த்து மேகமுதல் விரிஞ்சன்பதி வைகுண்டம் விண்ணவர் பண்ணவர் தம்மை தின்னமாகவே வேகமாகொடியில்கண்டு வேலர் வித்தகரிடமேவந்து சித்தமுடனேபார்க் கணபதியின் கரத்தில்பத்திய கனியைகண்டு மெத்தகோதித்து தாக்குவேன் கையிலதன்னை யென்றுசொல்லி சங்கரர்மேல் காய்ந்தாரே தங்கைமைந்தனும் தனனு தனதனனு.



விருத்தம்.

பரவைசூழுலகுபலகுன்றுதீவு
பகரரியமனுக்களுறையிடமுங்கீழ
அரவுபதிதன்னிடமுங்கனிஷ்டங்கொண்
அப்புரமும்புவிக்குமேல்மேகம்லாய
உரவும்பதிகதிர்சந்திரன் துருவன்பிரமன்
உலகளந்தமால்பதியும்வலமாகசுற்றி
திரமுடனேவருகயெனைக் காணமல்நீயுந
செங்கனியைகணபதிக்கித் தருகலாமா

வசனம்.

ஆஹா ஆ சபாசு நன்றாயிருக்கின்றது இந்தகடல்சூழ்ந்த உலகத்திலுள்ள சத்தநதியும் இமையகிரிமுதலாய பருவதங்கள் அஷ்டதிக்கும் சொல்லுதற்கரிதாகிய மனுக்கள் வசிப்பனாப்பட்ட இந்த உலகமும் இப்பால் கீழுலகத்தில் பாதாளலோகத்தில் அதிசேஷன் வாசமாகிய இடமும் அதற்குங்கீழ் எட்டுலக்ஷம் யோசனை தூரத்திலிருக்கும் கனிஷ்டபாதாளமுங் கண்டு அப்புரமேலெழுந்து மேகம் வாயு, கதிரவன், சந்திரன், துருவன், பிரமன், படிபடியா அவரவர் வசிக்கப்பட்டயிடத்தையும்பார்த்து அதற்குமேல் தேவகோடிகளுக்கு ஆதாரமாகிய உலகளந்த ஸ்ரீமந் நாராயணருடைய உலகமாகிய வைகுண்டத்தையும் பார்த்து ஒருக்ஷணத்துக்குள் வலமாகச் சுற்றிவந்த யென்னைக்காணமல் கிட்டயிருந்த கணபதிக்கு கனியைக் கொடுக்கலாகுமா யிப்படி நடப்பவர்களை யானறிகிலேனே.

தரு.

எந்தையேயிந்தமோசம் யெவர்கள்செய்வாரோசொல்லும்
யிப்படிநீருஞ்செய்ய யென்னமதியில்லும்
புந்தியமாகவாபரனே யின்வாயால்சொல்லி
பண்ணலாமாசதி யென்னாசைமாவிதி (எந்தை)

பெருமையுடையதந்தை பிள்ளைநால்வரைபெற்று
பேதகஞ்செய்த யென்னவிதியோ
வருமையோயெந்தன்மீது வரிற்றுபிள்ளைக்குகனி
மறைத்துதந்தது உந்தன்சதியோ

பொருமைபடைத்தவரென்று போற்றுகின்றதினுலே
பூரிப்புகொண்டாயினி ஆருன்னை அண்டார்தனி (எங்)

வீதிவிலக்குகளில்லா விமலனென்றுமேஉன்னை
விண்ணவர்பனியாரென் றெண்ணியேபார்த்திட்டா
நிதிநெடுமாலயனும் நிதநிதம்பணிகுவார்
நிமலாயிருக்குமகாநேர்த்தியா
மதியைநிருத்துபகா மாதவமுனிவரும்
மறைகளும்போற்றுகின்றமூர்த்தியா
சதிசெய்யுஞ்சிவனென்று சகலருமரியாரோ
தண்மைவிளங்குதிப்ப உண்மையையானுஞ்செப்ப (எங்)

பன்னுங்குடிகள்குற்றம் பண்ணினுல்தண்டம்விதிக்க
பார்த்திப னிருக்கிருர்பாரும்
மன்னவர்செய்தால்குற்ற மாதெய்வந்தண்டிக்க
மனுதரும முறைசதுமேதெரும்
சின்னஞ்சிறுவன்சொன்னந் தெய்வகுற்றந்தண்டிக்க
தெய்வங்க ளில்லாததால்நீரும்
அன்னதைநன்றுதெரிந்து அருங்கனிபக்ஷமாக
அத்திமுகர்க்களிக்க த்தமிககளிக்க (எங்)

விருத்தம்.

இந்தபடிநீர்செய்தால் ப்ரபனுரேயெவருன்னை
ஐயனென்று அண்டிவாழ்வார்
உந்தனிடஆசைதனை வெருந்தேயானும்
ஒருக்காலும்உன்முகத்தில் விழிப்பதில்லை
எந்தனிடஆயுதமும் ஆடைநீக்கி
இருக்கிஒற்றை கோவணத்தைதண்டுமேந்தி
தெந்திசையைதானேக்கி கைவிட்டு
சித்தமதுவெருத்துயிதோ நடக்கின்றேனே.

வசனம்.

ஆனுல் கேளுந்தந்தையாரே இனி உன்முகத்தில் விழிப்பதில்லை எல்லாவுடையும் எல்லாபணியும் எல்லா ஆயுதமும் விட்டொழித்து ஒற்றை கோவணத்தை கட்டிக்கொண்டு ஒரு தெண்டுகையில் பிடித்துக்கொண்டு தென்றிசையைநோக்கி செல்கின்றேன் தந்தையே.



பார்வதிசொல்லல்-தரு.

எங்கேநீபோகின்றுபாலா உனக்கேனிந்தகோலமும்வேலா
பங்கயமுகம்வாடி பரதேசிபோலவே
தங்குங்கைவிட்டு தனிபனுமேலவே (எங்க)

சுப்ரமண்யர்.

ஆருநீகேழ்க்கவேநில்லும் அன்னையோயெனக்குமேசொல்லும்
சோருபோட்டுவளர்த்த சொந்தபிள்ளையிருக்க
பாரும்பகையான பாலன்யானும்பெருக்க (ஆரு)

பரமசிவம்.

வெற்றிவேலேந்தியபாலா வேணசெல்வமிருக்கசீலா
ஒற்றைகோவணந்தண்டு உந்தனுக்குநேரு
பெற்றவரைவிட்டு பேசாதெக்கும்போரு (வெற்றி)

சுப்ரமண்யர்.

என்னைகேழ்க்கவெழ்க்கமில்லையா எனக்குநீதந்தையோசொல்லையா
முன்னைவந்துயெந்தன் முகத்தினில்முழிக்காதே
உன்னிபேரைநீ யிப்பவொழிக்காதே (என்)

பார்வதி.

தெள்ளுமணியேகிட்டவாரும் வந்துதெவிட்டாதமுத்தந்தாரும்
பிள்ளைமனங்கல்லு பெற்றோர்மனம்பித்து
இள்ளதைநாட்டினுய் உருகுதேயதையொத்து (தெள்)

சுப்ரமண்யர்.

தனையன்மனமதுருக்கவே தந்தைதாய்செய்தீர்கள்வெருக்கவே
கனியக்கனிபதிக்கி கர்த்தனும்தரும்போது
வினையாகண்டுநீயும் விளம்பினுயிப்மோது (தனை)

பரமசிவம்.

இந்தகனியென்னுபெரிதா யிதுபோலகனியுனக்கரிதா
எந்தெந்தபழம்வேண்டும் யெல்லாந்தருகுறேன்
கந்தனேவருகுவா நின்கருத்தைபோல்நிரைகுறேன் (இந்த)

சுப்ரமண்யர்.

நல்லதுவுன்னுயமிருக்கட்டும் உன்னடத்தையுமினிமேலே பெருக்கட்டும்
யெல்லைகனியெல்லாம் யெனக்குகிடைக்காதா
சொல்லவந்ததுபோதுந் தூரநில்லும்வாதா (நல்)

பார்வதி விருத்தம்.

இப்படிவெருத்துபேச யென்னனுன்செய்வேனப்பா
தப்பிதஞ்செய்திட்டாலுந் தனயனேபொருக்கொணுதா

பரமசிவன் விருத்தம்.

அப்பனேமணியேபாலா அருள்படிநடப்பன்யானும்
இப்பயிவ்விடத்தைவிட்டு யேகொணுதிருந்திடாயே.

சுப்ரமண்யர் விருத்தம்.

இருவரும்பிள்ளையென்று யெண்ணுததந்தைநீயும்
அருங்கனிஐங்கரருக்கு அன்புடனளித்துயென்னை
வெருமரம்போலேசெய்தாய் வீணரேவுன்முகத்தில்
திரும்பவும்விழிப்பதில்லை தென்திசைநோக்கினேனே.

பார்வதி-தரு.

ஐயோசிவனேநய்யமனம் அலையலாகினேன்
அறுமுகனும்வேருமாக குலையலாகினேன்

பரமசிவம்.

தேனேமைந்தன்தானேபோக செய்யவில்லையே
செப்பியமடிமெய்ப்பசெய்தேன் தேவிசொல்லையே

பார்வதி.

எல்லாசெல்வம்நல்லாயிருக்க யேனேகாலமோ
எந்தகுரையோகந்தைபணிய யிந்தகோலமோ

பரமசிவம்.

வெள்ளிமலையும்உள்ளபொருளும் வெருத்துகொண்டுமே
வேலன்போனுல்மேலும்வருவான் விசனம்வேண்டாமே

நாரதர் விருத்தம்.

செங்கதிர்வேலன்போக சிந்தையும்வெவ்வேறாகி
மங்கைபார்வதியுமீசன் மனம்வாடியிருக்கும்போது
திங்களின்வதனமுள்ள தெய்வகுஞ்சரிவள்ளியை
நங்கையைகலக்கம்செய்ய நாரதர்யெழுந்திட்டாரே.

தரு.

கந்தன்கயிலைவிட்டுபோகவே நாரதரும்
கடுகியெழுந்து வேகமாகவே



இந்தகலக்கங்கலக்கமல்லவே இன்னமும்சொல்வேன்
இதுக்குமேலா நடக்குமல்லவே
இப்படிகலக்கம்செய்தேனென்றுமே உலகந்தன்னில்
எவரும்யென்னை வைவார்கண்டுமே
ஒப்பியமுன்னூல்வழியகொண்டுமே நாடகமாக
உரைத்தோர்பேரை சொல்வேனென்றுமே
கொஞ்சிகுப்பம்வாழும்பதியதாம் துரைசாமிபாலன்
கூறினரிதை நிந்தாஸ்துதியதா
பஞ்சைசொல்லில்குற்றமிருப்பதா கண்டபேருக்கு
பாதம்பணிந்தேன் பொருப்பீர்நன்றதா
வஞ்சியிருவர்கலக்கஞ்செய்யவே எண்ணமுங்கொண்டு
வணங்கினேன்சபையோர் விடையுந்தருகவே
அஞ்சலிசெய்துவிடையுங்கொண்டேனே சந்தோஷமாக (கந்த)
அரிவையரிடம் போகநின்றனே

பொது வசனம்.

இப்படியாக நாரதர் யோசனைசெய்திருக்கிறபோது வள்ளியம்மை வருவது.

விருத்தம்.

கங்கையின்திங்களோ கடிகமிழ்கொன்றைபூண்ட
சங்கரன்குமரன்தேவி தையலாள்வள்ளியாளும்
பங்கயவதனம்துன்ன பாவைமாருகில்சூழ
செங்கையில்வளையல்கொஞ்ச சேயிழைவருகின்றாளே.

தரு.

வந்தாளிதோவள்ளியெனுமடமாது சுந்தரமாக (கருள்)
வாராளிதோ வடிவினில்மிஞ்சியசாது
வையகம்போற்றிடும் தையலாளென்ன (வந்தா)
நய்யவென்கலைமாது செய்யவள்யென்ன
செந்தாமரைமலரிணைவதனமுதுன்ன விழியில்மையும் (கருள்)
தீட்டியதிலக நெற்றியில்மின்ன
செப்பியகங்குலுக் கொப்பிடும்தலைகுழல் (வந்தா)
யிப்புவியெங்குமே மெய்ப்படும்வடிசழல்
பச்சைக்கல்மூக்குத்தி நத்தும்துலங்க கம்மல் மின்மின்ன (கருள்)
பெருத்தகொப்புடன் மயிர்மாட்டி குலுங்க
பங்கயகரமீது கங்கணங்கொஞ்ச (வந்தா)
மங்கையர்களும் தயங்கியகெஞ்ச

ஆறுமுகமானவர்க்குரியநற்பாரி அகிலமீது
ஆவந்துநிகொண்டுபணிகின்நாரி

அன்னநடையெனுமின்னிடைமாது
கன்னியர்க்கெல்லாங் கன்னியாந்தோது

சீசபத்தியம்.

வண்டணிகுழலியே வஞ்சியேகேளடி
வனிதையாள்யான்சொல்லும் வார்த்தைதன்னை
கண்யரிந்துரைக்கவே கன்னியாள்கேழ்க்குறேன்
கருத்தினில்யோசித்துசொல்லும் அன்னை
குண்டலதேவருக்கு குறைதீர்த்தநாதனும்
கூறெண்ணுதவர்செய்த குற்றந்தன்னை
அண்டைக்கிவல்லையே அவர்மூன்றுநாளாக
ஆரிடம்சொல்லியான் ஆருவேன்முன்னை

முடுக்கு.

என்னடியிவர்செய்தமாயமம்மா
என்னைவிட்டிருக்கயென்னமாயம்சும்மா
அன்னவர்வாருமலெங்கபோவாரம்மா
முன்னவள்திருத்தினுலோமொழியுமம்மா

தரு.

தையலெந்தன்பாங்கிகளே கில்லடி அம்மாகில்லடி
சண்முகனுர்செய்தஞாயம் சொல்லடி விள்ளசொல்லடி
எந்தனரமனைக்கிவல்லையே அவர்வல்லையே
இன்றோடமூன்றுநாளாதொல்லையே யெனக்குதொல்லையே
வாருமல்ஒருநாழி யிருப்பாரா மரந்துயிருப்பாரா
வஞ்சியரேயெந்தனையும் வெருப்பாரா என்னைவெருப்பார
காணுமலெந்தன்மனம் வாடுதே மனம்வாடுதே
கண்களுமூன்றுநாளா தேடுதே அவரைதேடுதே
இந்திரன்மகள்பேச்சைக்கேட்டு நின்றுரே கேட்டுநின்றுரே
இன்னம்பெவள்ஆசையாலே சென்றுரே தேடிசென்றுரே
அன்னமேயிதற்குபதில் ஓதடி பதில்ஓதடி
ஆண்டவருஞ்செய்ததெல்லாம் வாதடி அல்லாம்வாதடி

கொச்சகம்,

இந்துமுகமாதர்களே யென்னருமைதோழியரே
எந்தவர்மனைக்கிவாரா காரணத்தையானறியேன்



முந்தியதெய்வானையவள் மோசமதுசெய்தாளோதான்
எந்தவிதங்கண்டறிவேன் யென்னசெய்வேன்பாங்கிகளே.

வசனம்.

ஆனல் வாங்கடி சகிமார்களே என்பிராணநாயகனா மூன்றுநாளாக யென் அரண்மனைக்கி வல்லை யெனக்கு முன்னளவாகிய தெய்வானை மோசஞ்செய்து மறைத்தாளோ யென்னசெய்வேன் தோழிகளே.

தரு-நாரதர்.

என்னம்மாயிவ்விடங்கூட்டம் யேதுபித்தனைபேர்கள்நாட்டம்
கன்னல்மொழிமாதே கந்தருமில்லையா
பன்னிபார்க்கநீயும் பூடுந்துயர்தொல்லையா (என்)

வள்ளி.

வாரும்வாருந்தவமாமுனி நீரும்வந்ததுசந்தோஷம்யானினி
வாருமூன்றுநாளா வடிவேலரில்லையே
ஆருடன்சொல்லிநான் ஆறுவேன்தொல்லையே (வாரு)

நாரதர்.

தெரியவந்ததுஅவர்ஞாயம் தெய்வானைசெய்வதுமாயம்
அரியவேசொல்கிறேன் அவர்க்காசைஅங்கவே
உரியதவஉன்ஞசை ஒப்புக்குபிங்கவே (தெ)

வள்ளி.

இன்றைக்கிதெரிந்தேனுன்மாது அந்தயிருவர்களும்செய்தகுது
என்றைக்கியிவர்களுமிப்படிசெய்வது
நன்றினிமேலாகநான்யாரைவைவது (இன்)

நாரதர்சொல் விருத்தம்.

பத்தினிவிசனம்வேண்டாம் பகருவேன்வார்த்தைகேளும்
சற்றுநீபொறுத்துக்கொள்ளுந் தையலாளிடமேசென்று
ஒத்தியேபதுங்கிருந்து உளவதையின்னதென்று
சித்தத்தில்தெளிந்துயானும் சீக்கிரம்வருவேனம்மா.

வசனம்.

கேளுமம்மா வள்ளிநாயகம் நீ யாதொன்றுக்கும் விசனப்பட வேண்டாம் நீபொறுத்துக்கொள்ளும் தெய்வானையிடத்திற்கு யான் சென்று சுப்ரமண்யசுவாமிகள் அங்கிருப்பதும் இல்லாததும் தெரிந்துக்கொண்டு வருகிறேனம்மா வள்ளிநாயகம்.

தெய்வானை வருவது விருத்தம்.

பருவதராசன்செல்வி பாமனுமிருவர்கூடி
அருமையாய்பெற்றெடுத்த ஐங்கரருக்கிளையோரான
பெருமையாம்வேலருக்கு பிரியமாயமர்ந்தயரி
நருமலரணிதெய்வானை நாயகிவருகின்றளே.

தரு.

செல்வந்தனில்மிகுந்த அல்லல்தனையொழித்த
தெய்வானைமாதுவாராள் ஒப்பாரமாகதெய்வானைமாதுவாரான்
வல்வினைமிகுத்திடும்வடி வேலர்தேவியென
கல்விக்கரசிமாது கனிந்துருகுவாள்சாது சருள்

சுத்திடுமடியவர் பத்தியபதந்தரும்
சத்தியுமிவளென உத்தமியருள்பெரும் (செல்)

நெத்தியில்திலகஞ்சூட்டி நெடுவிழிமைதீட்டி
முத்துமூக்குத்திகாட்டி முனைந்துவருஞ்சீமாட்டி
மொய்க்குழல்பின்னியே பக்குவமாக
சக்கரைவாய்மொழி நற்குணமாக (செல்)

கம்மல்சிமிக்கிசெவி செம்மையாயிலங்கிட
பொம்பதிரேகமும் விம்மியேகுலுங்கிட
சருள் கொத்துடன்மாலைகள் முத்துடனேமணி
ரத்தினபதக்கமும் மெத்தவேமீதணி (செல்)

கெடியகரத்தில்மீது தொடியுங்கலகலென்ன
கொடியினிடையின்மீது படியுஞ்சேலைகள்துன்ன
சருள் கொஞ்சியேதண்டைகள் மிஞ்சியேகாலினில்
தஞ்சமேயென்றிடும் வஞ்சியென்பாலினில் (செல்)

நாரதர் விருத்தம்.

முப்பத்துமுக்கோடிதேவர் முனிவர்கள்நெருங்கிசூழும்
கற்பகத்தருகீழ்நின்று காரணங்கண்டறிந்த
பொற்புள்ளயிந்திரன்செல்வி பொற்கொடிமணியேவுந்தன்
அற்புதபிரானுன அறுமுகன்யெங்கேயம்மா.

வசனம்.

தேவர் முனிவர்கள் சூழும்படியாக கற்பகத்தரு கீழலிருந்து அரசுசெய்யும் தெய்வேந்திரன் செல்வியாகிய தெய்வானையே உனது நாயகனான சுப்ரமண்யசுவாமி யெங்கே சொல்லம்மணி.



தெய்வானை விருத்தம்.

வாரும்நாரதரேநீரும் வந்ததுசந்தோஷமாச்சு
ஆறரைமூன்றுநாளாய் அறுமுகவேலரைக்காணேம்
காரணமறியாமல்தான் கன்னியாளிருக்கும்போது
பூரணதெரிந்திருந்தால் புகலுவீரரியத்தானே.

வசனம்.

வாருமையா நாரதமுனிவரே நீரிங்கேவந்தது மிகவுஞ் சந்தோஷமாகிவிட்டது இன்றைக்கி மூன்றுநாளாக யெனது நாயகனாகிய சுப்ரமண்யதேவரைக்காணேம் உமக்கு தெரிந்திருந்தால் சொல்லும் நாரதரே.

தரு-நாரதர்.

நல்லாயிருக்குதம்மாநாயம் உந்தன் நாதன்செய்ததேமகாமாயம்
செல்லாது உன்மேலாசை செங்கைவடிவேலருக்கு
எல்லாந்தெரிந்ததிப்போ யென்றுசொல்வேனாக்கு (நல்லா).

தெய்வானை.

சொல்லும்யெனக்கரியபாழ்ங்கையா சூதுநீயரிவேதாவிமெய்யா
அல்லும்பகலுமெந்தனுரைவிட்டொழியாதே (சொல்)
வல்லவர்மூன்றுநாளாவாறிருப்பதேதே

நாரதர்.

இருக்குதயினையாள்மேலாசை யெழுனக்குவிஸ்பிரயாசை
திருக்கைவேலர்மூன்று தினமாகயிருப்பது (இருக்)
உருக்கிபாரும்தெரியும் உன்னையேவெறுப்பது

தெய்வானை.

வெருத்ததுயெந்தனைமெய்தானு வீணுகசொல்லவேதாபொய்தானு
பொருத்தம்வள்ளிமேலானுல் போய்சற்றேபார்க்குறேன் (பொருத்)
பெருத்தவேல்முருகனை பின்னுலேயேர்க்குறேன்

நாரதர்-விருத்தம்.

அம்மாநீசென்றுயானுல் அறுமுகனவரைப்பார்க்க
உம்மாலேகலகம்நேரும் உத்தமிபோகவேண்டாம்
சும்மாநீநில்லுந்தாயே சுருக்காகயானுஞ்சென்று
செம்மானுள்வேலர்சேதி தெரிந்துமேவாரேனம்மா.

விருத்தம்.

தேனெனுமொழியாளான தெய்வானைதன்னிடத்தில்
நானுமேசென்றுபார்த்த நாயகர்வேலர்தம்மை

ஒ
ளவன்மறைத்துவைத்து யென்கண்ணில்காட்டேனென்றான்
மீபானதுவிணையாச்சு பொற்கொடியென்னசெய்வேன்.

வசனம்.

கேளுமம்மா வள்ளிநாயகம் நான் அந்த தெய்வானையிடத்தில் யான்சென்று பார்க்கிறபோது வேலவரை மறைத்து வைத்துக்கொண்டு யென்கண்ணில் காட்டமாட்டேனென்று சொல்லிவிட்டாள் நான் போனது வீணனகாரியமாகிவிட்டது அம்மணி.

வள்ளி-தரு.

நாரதர்தானுரைக்க நங்கையாள் வள்ளிபுந்தானெழுந்து
பாரிலேபாணுஞ்சென்று பாவையாள்கொண்டகருத்தறிவேன்
இந்திரன்தன்மகளும் யெந்தன்கணவனைமூன்றுநாளா
சொந்தமாகமறைத்துகொண்ட தோகையாளெண்ணமறிவேன்
செந்திருவேலவரும் அந்த தெய்வானைவசத்திலிருப்பாரு
அந்தவிதமெல்லாஞ்சென்று அறிந்துமேயவள்சேதிதெரிந்துவாரேன்
ஒன்றிரண்டுநாளுந்தமர் யெனைவருத்திருப்பாரு
கண்டுஅவர்சேதிகாரியிழை மின்னல்விளம்புவேனே.

வள்ளிவிருத்தம்.

என்னடிசக்காளத்தி யிறையவர்மூன்றுநாளா
என்னிடம்வருகாமலே யென்டிநீமறைத்துவைத்தாய்
சின்னியேஉந்தன்சேதி தெரியவேவந்ததிப்போ
பன்னடிசெய்தவேலை பாவையாளறியத்தானே.

வசனம்.

அடிவாடி சக்காளத்தி யென்னுயகராகிய முத்தைய தேவரை யெண்டிமூன்றுநாளாக மறைத்து வைத்திருக்கிறாய் தெரியசொல்லடி கள்ளியே.

தெய்வானை விருத்தம்.

வித்தகிஉந்தன்சேதி வெகுநாளாய்தெரிவேன்யானும்
கர்த்தனைமூன்றுநாளா காதகிநீமறைத்து
வைத்துமேயென்னிடத்தில் வாதாடவந்தாய்கள்ளி
உத்தமிபோலபேசும் உன்னுளமெல்லாந்தெரிவேன்வாடி.

தரு-வள்ளி.

கல்லாயிருக்குதன்னடத்தையும் யிப்போது
நங்கையேநான் கண்டுகொண்டேன்
மங்கையேகள்ளுக விண்டேன்
வல்லாளகண்டிநீவடிவேலர்தம்மை
சொல்லாதவார்த்தைகள்சொல்லிமறைத்துமே



வள்ளியம்மை-விருத்தம்.

பூமயிலேறமர்ந்த புள்ளியநாதாவுக்கன்
தாமலர்பாதந்தன்னில் தோகையாள்பணிந்தேன்மாமா

பரமசிவம்-விருத்தம்.

பங்கயவதனமுள்ள பாவையேநீங்களிப்போ
எங்குமல்பணிந்ததாலே யிருவரும்வாழிவாழி
அங்குமும்வாடிசேர்ந்து அகமேவயப்பட்டுவந்த
சங்கதியின்னதென்று சம்பாபாவுளாசெய்யீரே.

தெய்வானை-தரு.

ஆறுமுண்டருள்காலாவரை அருமைமாமாவே
அன்னால்வேலவரைகண்ணில்காணும அருமைவாடுறேன்

வள்ளியம்மை-மாலயன்காணுமல காரணமாமாவத்தனம்
மாமயிலேறுந் சுவாமியைக்காணுமல் மங்கைவாடுறேன்

பரமசிவம்.

காலமோவென்ன கோலமோயிது கன்னிமார்களே
கந்தன்போனல் வந்துவிடுவான் கவலைவேண்டாமே

தெய்வானை-தாண்டவாநாதா மூன்றுநாளாக தவிக்கலாகுமா
சண்முகரெங்க உண்மையாய்சொல்லும் சாமவேததரே

வள்ளி-வேண்டுவோர்நெஞ்சில் மயம்பிடாத வேலவரெங்கபோ
வேதமேசொல்லுஞ் சுதிக்காமம் மெய்ச்சிக்கட்டவே

பரம-பரண்டராதிதொண்டும் மதனிபாவைமார்களே
பார்வதிதன்னை கேளுங்கேட்டு பார்த்துதெரியுமீர்

தெய்வ-ஆரையுள்ள அத்தையம்மே அடிபணிந்தேனே
ஆறுமுகரெங்கேபோனர் நீருஞ்சொல்லுமீர்

வள்ளி-பாசமுள்ள அத்தையம்மே பதம்பணிந்தேனே
பத்தாவான வேலரெங்கே மெத்தசொல்லுமீர்

பார்வதி-பாசில்லாத மருமகளே மனமுங்கூடியே
மைந்தனுமேலெந்தன்மனம் சேர்ந்துவாடுதே

தெய்வ-இருவரும்மாந்தன்காலயன்தன்னை யென்னுமசெய்றீர்கள்
எங்கேயென்றுகேட்கமன மயங்கவாடுறீர்

வள்ளி-மருவம்குழல் மாமியாரே மங்கைநாந்தன்னையே
மாதாபிதாவென்றுசெய்றீர் கோதாசொல்லுமீர்

பார்வதி-இருவரும்மன்னுடன்சொல்லவில்லை உத்தமிகளே
உங்களுக்குமனத்துசொல்லி யெங்குமிருப்பாரம்

நாரதர்-விருத்தம்.

கன்றுநாள்வந்தோமபாச கதிர்வடிவேலர்தம்மை
தெண்டுகோயமாந்தன்வேறு சிவகிரிமலையின்மீது

பண்டுமாமுனிவர்சித்தர் பண்ணவர்விண்ணோரெல்லாம்
அண்டையில்துதித்துநிற்க அவரங்கேயிருக்குறாரே

தெய்வயானை-தரு.

கண்டதுஉண்மையாமாமுனி காண்போநாமினி
கன்னிசந்தோஷித்தேன் பாருனி

வள்ளியம்மை.

சொன்னதுமாதவாசரிதானா உனக்குவெரிநானா
எந்துரையேநீகண்டது பெரிதானா

நாரதர்-பொய்சொல்லயெனக்கென்னவிதியா கெட்டமதியா
நான்புளுகனோசொல்லுங்கள் மதியா

தெய்வயானை-கலகக்காரனென்று வழக்கம்செய்துபழக்கம்
கன்னியுரைத்தேன் முழக்கம்

வள்ளி-குண்டுணிகோள்களேசூத்திரம் உனக்குபாத்திரம்
கோதையுரைத்தனன் சாத்திரம்

நாரதர்-சொல்லவந்ததுயெனக்கு குற்றமாஉனக்குப்பித்தமா
சோதித்தால் தெரியுமே சுத்தமா

பார்வதி-குற்றமில்லாகுணநன்மையா சொல்லுந்திண்மையா
குழந்தையேகண்டது உண்மையா

நார-உமக்குப்பொய்சொல்வதோ சொல்லம்மா சொன்னதெல்லாம்
யோசனைசெய்நீ நில்லம்மா

பார்வதி-நாரதாஉன்னைநானறிவேன் முன்புபிரிவேன்
உன்னடத்தையே நெடுநாளாதெரிவேன்

நாரதர்-அம்மம்மாயென்மேலேகோபமா இதுபாவமா
அறிந்ததுசொன்னது சாபமா

பரமசிவம்-சத்தியதவத்திற்குகுணசீலா நல்லகுணசீலா
பெந்தனையனைகண்டது அதுமேலா

நாரதர்-மேலாபதவிக்குநாதா அரும்வேதா
விமலநான்சொல்வது சூதா

பரம-குத்திரம்கோள்கள்யென்றுங்குடியே உமக்குமிடியேநன்று
கூருவீன்றுமிந்தபடியே

நாரதர்-சுந்தராசிவகிரிசென்று சொன்னதைகண்
சோதித்தால்தெரியுமே நன்று

பரமசிவம்-விருத்தம்.

தொல்லைமாமுனியேயுந்தன் சொல்லைநான்வொப்புக்கொண்டேன்
நல்லதுநீரும்வாரும் நான்போகவேணுமப்பா
மெல்லிதெய்வானைவள்ளி மேன்மையெந்தேவிமாரும்
செல்லுவோஞ்சிவகிரிக்கு சிக்கிரமாகத்தானே.



சோதிக்கிறாயென்னை பேதிக்குறாயேண்டி
சாதிக்கிறாய்வீணா பாவிக்குறாய்தாண்டி. (நல்)

தெய்வானை.

தாண்டிதாண்டிவந்து சண்டைக்கிழுப்பது
சக்காளத்திஉந்தன்சாதி தனக்கு
ஒக்குமேநீபேசுநீதி
வேண்டியவார்த்தையே வேல்வர்க்குசொல்லி
யேண்டிமறைத்துநீயென்னைமிரட்டியே
யெத்துகிறாபேசி பத்துகிறாதாவி
நத்துகிறாயென்னை சுத்துகிறாபாவி (தாண்)

வள்ளி.

பாவிசக்காளத்தி உன்பாவனையறிவேனான்
பதுக்காதேதாசிபோலே நின்று
குலுக்காதேயெந்தன் முன்னாலே
ஆவியும்வாடுதே ஆரரைநாளா
கூவியழைத்துக்கொண்டாய் கூர்வடிவேலரை சரு
கொம்பனையேசூது வம்புகள்பேசுறாய்
தெம்புகள்கொண்டுமே சம்பிரமாவீசுகிறாய் (பாவி)

தெய்வானை.

வீசுறாய்நீவந்து வேசிகள்போலவே
வெழ்க்கமுனக்கில்லை வள்ளியேஎந்தன்
பக்கத்தில்நிற்காதே கள்ளியே
ஆசைகள்காட்டியே அண்ணல்முருகர்தம்மை
பேசிவைத்துக்கொண்ட பெருமையாலேவந்து சரு
பிணக்குசெய்யகின்ற குணக்குகாரிபோடி
யிணக்கமில்லாமலே வணக்கமற்றாயோடி (வீசு)

நாரதர்-தரு.

பதறுதேபொரும்பொரும் அம்மா
பதறினால்காரியம் சிதறுமேசும்மா
விதந்தெரியாமல் நீங்கள்சண்டை
வீணேபிடித்துக்கொண்டா யிருவருங்கொண்டை
சக்காளத்திபொறாமையைக்கண்டு
சகத்தில்பழமொழியாய் சாத்துவதுண்டு
அக்கதைதெரிந்திருந்து நீரும்
ஆத்திரப்படலாமா யிருவரும்பாரும்
தந்தைதாயிடமுந் தானோ
சண்முகர்சென்றாலும் விபரமாகேளு

பந்தியங்கனிவொன்றுக்கீறு
பரமன்மேல்வந்ததாம்அவருக்குவாறு
எல்லாமணிபணியும்விட்டு
ஏகாந்தமாய்ஒற்றைக்கோவணந்தொட்டு
சொல்லாமல்தெற்குசென்றுரென்று
சொன்னதைக்கேட்டுவந்தேன் தோகையிருவுண்டு

விருத்தம்.

சங்கதியிதுதானம்மா சண்முகனாலேசண்டை
பொங்கியேபோட்டுக்கொண்டால் புருஷனைக்காண்பதில்லை
இங்கேயில்லாமல்சென்று யீசனைவிபரங்கேளும்
எங்கேசென்றிருப்பார்வேலர் யேகினன்பார்த்துவாரேன்.

வசனம்.

கேளுமம்மா வள்ளிதெய்வானையே நீங்கள் யிப்படி சண்டை போட்டுக்கொண்டால் வேலவரைக் காணப்போகிறதில்லை நீங்கள் சென்று உங்கள் மாமன் மாமியாரைக் கேட்டுக்பாருங்கள் நான் எங்கேயாகிலும் போய் பார்த்துவாரே னம்மணி

வள்ளி-விருத்தம.

அக்காநாம்வீணேவாதம் அறியாமல்செய்துகொண்டோம்,
மிக்கானசேதியெல்லாம் விளங்கவேதெரிந்ததம்மா

தெய்வானை-விருத்தம்.

தக்கானமொழியுரைக்குந் தங்கையேசொல்லக்கேளும்
அக்கரவம்பூணுமீசன் அவரைகேட்டுக்கொள்வோம்

தரு-வள்ளி.

தமக்கயரேதெரியாமல் நாம்சண்டையிட்டோமே
தவமுனிவர்தன்னாலே நாம்தயக்கம்விட்டோமே

தெய்வானை.

நமக்குள்ளநாம்தெரியாமலே நாணம்விண்டோமே
நாரதருரைக்கும்வுண்மை நாமுங்கண்டோமே

வள்ளி

செம்மானேந்துஞ்சிவனை கேட்டுசித்தந்தேருவோம்
செங்கைவேலர்செயலவரால் தெரியகூறுவோம்

தெய்வானை

அம்மான்அத்தையருகில்வந்தோம் அடிபணிகுவோம்
அல்லாசேதியுந்தெரிந்து அம்மைநுணிகுவோம்

தெய்வானை-விருத்தம்.

காமனையெரித்தகண்ணா கன்னியாள்அருகில்வந்து
மாமறைவழங்குந்தாளில் மங்கையாள்பணிந்தேன்மாமா.



தரு-பரமசிவம்-சிவகிரிதனக்குசெல்வோமாமுனி
தேவியாரே பாவைமாரே
சீக்கிரமாகச்செல்வோம்நாமினி
பார்வதி-மங்கையாழ்மனமும்வாடிநாதரே
மைந்தனாலே இந்தவேளே
வந்துதேநடவும்வாரேன்வேதரே
வள்ளி-கணவன் தன்னைமூன்றுநாளாகர்த்தரே
லாணவில்லை ஊணும்மில்லை
கன்னியாள்வாடிவாரேனித்தரே
தெய்வயானை-துரையைநான்மூன்றுநாளாய்க்காணுமல்
தூக்கமில்லை யேக்கந்தொல்லை
தோகையாள்வாரேன்மாமாநாணுமல்
நாரதர்-கர்த்தனேநான்முன்னேபோரேன்வாருங்கள்,
கன்னிமாரும் அன்னையாரும்
கடுகியான்போரவழிபாருங்கள்
பரமசிவம்-வெள்ளியங்கிரியைவிட்டுத்தாண்டியே
பிகுவாய்நடந்தோம் வெகுவாய்துடர்ந்தோம்
வேலவர்தம்மைக் காணவேண்டியே
பார்வதி-ஐயனே வந்தோம்நெடுந்தூரமே
அறுமுகனால் பெருமகனால்
அருவையாள்சேர்ந்துவாரேன்பாருமே
தெய்வயானை-காடுசெடிகுன்றுமலைதாண்டினோம்
கண்டோம்வேணை துண்டுபிராண
கணவனிடமுமெங்கேவேண்டினோம்
வள்ளி-பார்க்காதமலைவனமும்பார்த்தனே
பாவைமுன்னாள் தாவும்யென்னாள்
பத்தாவாழிடமுமெங்கே யத்தனே
நாரதர்-சிவகிரிதோணுதிதோ பாருங்கள்
செங்கைவேலர் தங்குமேலர்
தெரியுதேநீங்களங்கேசேவியுங்கள்

பரமசிவம்-விருத்தம்.

நணிபெருமுனிபின்னாலே நாமுமிவ்விடமும்வந்தோம்
வனிதையேயிங்குவாரும் வடிவேலர்தம்மைக்காணும்
இனிமையாய்நீங்கள்சென்று யிருவரும்அழைத்துப்பாரும்
கனிவுடன்வந்தால்வாரும் கர்த்தனன்பின்னால்சொல்வேன்

தெய்வயானை-கொச்சகம்.

சித்தர்முனிதேவர்களுந் தினந்தினமும்பெருமையுடன்
வைத்தமிருக்கவரலாமே நீதனியா

சத்திவடிவேலவரே மெல்லடிக்கியொள் சரணம்
பத்தியுடனம்மனேக்கி பக்ஷமுடன் செல்வோம்வாரும்

வள்ளி-மேவும்பணிபூஷணமும்விதவிதமாயிருக்கவொற்றை
சோவணைத்துடன் தனியாய் குன்றுதனில்வரலாமா
தாவுநடைமெல்லடியில் தையலாளும்யான்பணிந்தேன்
தேவர்தொழும்பதிக்குச்செல்வோம் வாரும்பிராணநாதா

சுப்பி-வெள்ளிமலை தன்னைவிட்டு வேறுபட்டுவந்தயென்னை
தெள்ளுமொழிதெய்வானை தேடிவந்தவிதமுமென்ன
விள்ளுநீங்கள்வந்தவிதம் மெல்லியரேயிருவருமே.

தெய்வயானை-தரு.

என்னமாதுணிந்துவந்தாயோ யெந்தனைவிட்டுஎப்படி
தன்னந்தனியாகவே தையல்மனநோகவே
அன்னிதமூன்றுநாளா அரண்மனைக்குவாராமல் (என்)

சுப்பி-இந்தாநீகேழ்க்கவொண்ணாதே தெய்வகுஞ்சரி
இப்படிநீயேற்கவொண்ணாதே
வந்தாஉந்தனுக்கென்ன வாவென்றுஆருசொன்னா
பந்தாரணிகுழலாள் பாவையிங்குகில்லாதே (இந்தா)

வள்ளி-ஆசைக்குகந்தநாதரே எனைமறக்க-அன்புவந்ததோவேதரே
தேசபாசமும்விட்டுதெக்கு நோக்கியதொட்டு
வாசமாயிங்கிருக்கவந்ததோ தலைவிதி (ஆசை)

சுப்-உன்னைகேட்டியாரும்வல்லையே வள்ளிநாயகியுரைப்பதுமிகதொ[ல்லை
என்னைநீகேட்டாய்மானே யின்பமல்லடிதேனே
வன்னக்கிளியேஅங்கு வரமாட்டே னினியானே (உன்)

தெய்-சத்திவடிவானநாதரேயிப்படிசொல்ல தருமமோஉமக்குவேத[ரே
வித்தகியெந்தனாலேவெறுத்துவந்தாயோமேலே
சித்தம்வாடுதென்னாலே சீக்கிரம்வாரும்பின்னாலே (சத்)

சுப்-உந்தன்மீதுகோபமில்லையேயிப்போதுநீயும் உரைப்பதுமிகதொ[ல்லையே
இந்திரன்மகளோபாவம் யீசன்மேலெனக்குகோபம்
வந்துதேஅங்குயாரும் வரமாட்டேனினியானே (உந்)

வள்-சூரசம்மாரமூர்த்தியேஉனக்குகுருத்தம்தோகைசெய்தனோநேத்தி[யே
ஆரரைமூன்றுநாளா அருவைவாடுரேன்தோளா
பாரும்யெந்தனை கண்ணால்பார்த்துவாரும்யென்பின்னால் (சூர)

சுப்-வள்ளியென்பிராணகாரனி-உங்கள்கோபம்வாராதொன்றைக்கு
வெள்ளிமலைவாழ்நகர்த்தன்விமலன்செய்தாரோகுத்தம் [பூரணி
உள்ளதுசொன்னன்சித்தம் ஒருகாலும்வரமாட்டேன் (வள்ளி)



பரமசிவம்-விருத்தம்.

குத்தனைன்செய்தாலென்ன குழந்தைநீபொருக்கொண்ணாதா
பித்தன்போல்தனியனாகி பேசாமல்வந்துவிட்டாய்
இத்தனைநேரமாக யிருவரும்வந்தழைக்க
சித்தமுமிரக்கமில்லை சிறுவனேதருமந்தானா

தரு-கருணையுடன்சரவணையில் தருணம்வந்தபாலா
கண்களிக்கவிண்களிக்க மண்களிக்கும்வேலா
வருணகனிதிரணமாச்சு அருணவொளிசிலா
வந்தருளுங்கந்தனே நீமூந்துங்கனிமேலா

பார்வதி-காங்கயனேயாங்கள்கனி தீங்கனிநீயென்று
கரியவரும்பெரியவரும் பிரியங்கொள்வார்நன்று
பாங்கமில்லாமாங்கனிக்கு தேங்கலாமாநின்று
பத்துன்னிதழ்முத்தங்கனி சத்தியெனக்குண்டு

பரம-முக்கனியேசர்க்கரையே பக்குவசெங்கரும்பே
முதிருங்கனிமதுரமொழி யிதழுந்தினரும்பே
தக்கவருமிக்கவரு தொய்க்குபழனிவிரும்பே
தானவரும்வானோர் துதி மோனத்தின்கண்வரம்பே

பார்-அருங்கனியும்பெருங்கனியு நருங்கனிநீரையா
அதில்கனிந்துதகம்பிவடி மதுரசமேமெய்யா
திரங்கனிந்துதரங்கம்வேலை ஒருங்குவேல்கையா
செங்கைபழனிங்கிதமே தங்கமேவாழ்தய்யா
செங்கைபழனிங்கிதமே தங்கமேவாழ்தய்யா

வருக்கைபருவம்-பரமசிவன் சொல்லல்.

கரும்புந்தேனுஞ்செம்பாகும் கைக்கும்பழநிதான்வருக
கன்னாரமுதுங்கற்கண்டுங் கயக்கும்பழநிதான்வருக
விரும்புகின்றமுக்கனியும் வெருக்கும்பழநிதான்வருக
விண்ணோரமுதுந்தான்புளிக்கும் வேண்டும்பழநிதான்வருக
சுரும்புநாணோன்நாணுடையா துஞ்சாபழநிதான்வருக
தோன்றுங்கதிரோனொளிவடிவா துவர்க்காபழநிதான்வருக
பெரும்பையசுரர்குலகாலா பெரியபழநிதான்வருக
பேசரிதாருமுகபெம்மான்பெம்மா னழைத்தேன்வருவாயே.

பார்வதி சொல்லல்.

தெள்ளுமணியேமணிகுன்ற சிவந்தபழநிதான்வருக
தெவிட்டாதினிக்குஞ்செந்தேனே தேவபழநிதான்வருக
விள்ளுங்கரும்புப்பனிபாக விளியாபழநிதான்வருக
விண்ணோர்மண்ணோர்தினந்தினமும் விரும்பும்பழநிதான்வருக
இரையுங்கடலைசுவரிடவேல் யேவும்பழநிதான்வருக
துள்ளுமயிலின்முதுகின்மிசை தோன்றும்பழநிதான்வருக
துலையாவாழ்வுக்கரசேயெந்தன் துரைகனிந்துவருவாயே.

சுப்ரமண்யர் விருத்தம்.

...மேதந்தைதாயார் வருகையின்பருவங்கூறி
எந்தனைப்புகழ்ந்தபோது யினிகோபம்விட்டொழித்தேன்
இந்தனிநாதாதாயே யிருவர்பொற்பாதந்தன்னில்
கந்தமாமலர்கள்சூடி கடையவன்பணிந்திட்டேனே.

பரமசிவம் விருத்தம்.

பணிந்திடுமைந்தன்தன்னை பரமனுங்கையால்வாரி
அணைந்துமுத்தமிட்டு அம்மனுக்களித்திட்டாரே

பார்வதி விருத்தம்.

மணிவளைகரத்தினாலே மைந்தனைவாங்கித்தாயார்
துணிவுடன்முத்தந்தந்து துய்யனைமடியில்கொண்டாள்

சுப்ரமண்யர் விருத்தம்.

எந்தனின்கோபமாற்றி யிருவரைவலமாவந்து
தந்தையேபணிந்துநின்றேன் தனையனைக்கின்னதென்று
உந்தனல்வாக்குனாலே உயர்வரமளித்துயென்னை
பிந்தியுங்காக்கவேண்டும் பெருமானேபாதம்போற்றி.

வ-ம். சரணஞ்சரணமென் தந்தையே என்னுடைய கோபத்தை விட்டுதங்களுடையபாதம்பணிகிறேன் எனக்குவரந்தாரும்கர்த்தனே.

பரமசிவம் விருத்தம்.

சித்தமுங்கனிந்தயெந்தன் செல்வனேவாழியுன்னை
பத்தியாய்தந்தைதாயார் பழநியென்றழைத்ததாலே
இத்தலமுன்பேர்மாற்றி யிதற்குமேபழநியாகும்
மெத்தவுமிவ்விடத்தில் மெல்லியருடனேவாழ்வாய்.

வசனம்.

கேளுமப்பா சண்முகக்கண்மணி நாங்களிருவரும் உன்னைபழநியென் றழைத்ததாலே இந்த சிவகிரிமலைக்கு முன்பெயரை மாற்றி இதற்கு பழநியென்று நாமத்தைவைத்தோம் நீ இந்தயிடத்தில் சுகமாயிரு கண்மணி.

விருத்தம்.

வேலவர்கோபமாற்றி வியன்மலைபழநிதன்னை
சாலவும்பெத்துக்கொண்ட சண்முகர்சரிதந்தன்னை
மேனுமேபடிப்போர்கேட்போர் மிடியதுபோக்கியீசன்
ஞாலத்தில்பெருமைவாழ்வும் நலம்பெறஅளிப்பர்தாமே.

25917

மேற்படி விருத்தம்.

சத்தியுஞ்சிவமாய்வந்த சண்முகர்சரிதந்தன்னை
பத்தியேநாடகமதாக பாடினோயாடினோர்கள்
இத்தரைமீதில்வாழ்ந்து யிருதியுமடையுங்காலம்
முத்தியுந்தருகுமீசன் முளரித்தாள்வாழ்கத்தானே.

மாங்கனிசரித்திர நாடகம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அஷ்டாஷ்ட மூர்த்தங்களாகிய

# சிவபராக்கிரமம்.

ஒப்பு ஒதி மூர்த்தியில்லாத சிவபெருமான் தம்மடியார்க்கு அநுக்கிரகஞ் செய்யும்வண்ணஞ் சுவீகரித்த அறுபத்து நான்கு மூர்த்தங்களே சிவபராக்கிரமம் எனப்படும். இவ்வரிய நூலைச் சிறந்த செந்தமிழ்நடையில் செவ்வனே பயின்று பன்னூல்கள் உரையெழுதியும், சில நூல்கள் மொழிபெயர்த்தும், விளங்கும் சென்னை கிறிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும் சைவப்பிரசாரகருமாகிய ஈக்காடு. இரத்தினவேலுமுதலியார் அவர்களால் தமிழ் வசனநடையிலியற்றி அவ்வவ்வற்புதங்களை நேரிற்கண்டனபோல விளக்கத்தக்க 64-திவ்ய திருவுருப்படங்கள் சிற்பநூல் விதிவழுவாது எழுதியமைத்து முக்கியமான விடங்களில் வேதம், உபநிஷதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய பல வடநூல் மேற்கோள்களும், தமிழ்நூல் மேற்கோள்களுங் காட்டி அச்சிட்டு அழகாகப் பயின்டுசெய்துள்ள இந்நூல் இன்றியமையாதது. இதிலுள்ள திருவுருவங்கள் பூசிக்கத்தக்கன.

புத்தகத்தின் விலை ரூபா-2.

அ. முத்துவடிவேல்முதலியார்,

நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி,

சென்னை.